2021 - இதழ் 03

இலவசம்

பங்குனி - 2021

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2021 - இதழ் 03

## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 03


பக்கம் **4**

### இயேசுகிறிஸ்து மாறாதவர்

அவ்விதமாகவே அவர் எமக்காக தமது ஜீவனைக் கொடுத்து எமது பாவங்களுக்காக மரித்து, பாவத்திலும் பிசாசின் கட்டுகளிளுமிருந்து எமக்கு விடுதலை தந்தார்.

பக்கம் **6**

### நித்திய ஜீவனுக்கு ஈடு உண்டோ?

சில மனிதர்கள், தங்கள் வாழ்க்கையிலே ஒன்றை அடையும்படிக்கு, தங்கள் வாழ்க்கையில் உள்ள வேறு சில காரியங்களை இழந்து விடுவதற்கு அல்லது மற்றவர்கள் வாழ்க்கையிலுள்ள ஏதாவது காரியங்களை பணயம் வைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

பக்கம் **13**

### பிரசங்கக் குறிப்புகள்

வாழ்நாட்களிலே நாம் அநேக துன்பங்களை எதிர்நோக்கினாலும், அநாதி தேவனே நமக்கு அடைக்கலமாக இருக்கின்றார். அவரை நம்பியிருக்கின்றவர்களை அவர் முடிவிலே தேவ ராஜ்யத்திற்கு கொண்டு போய் சேர்ப்பார்.

பக்கம் **15**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 15ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... பங்குனி 1, 2, 7, 12, 17, 18, 20, 23, 24, 25, 26, 27, 29, 30, 31

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... பங்குனி 1, 2, 3, 5, 6, 8, 11, 12, 13, 17, 18, 20, 22, 23, 27, 31

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... பங்குனி 1, 3, 5, 6, 7, 11, 12, 13, 20, 22, 31

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... பங்குனி 2, 6, 12, 14, 16, 18, 19, 20, 21, 22, 28, 31

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... பங்குனி 1, 2, 4, 5, 6, 8, 11, 12, 13, 19, 20, 22, 25, 28

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... பங்குனி 9, 10, 12, 17, 18, 21, 23, 24, 25, 29, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... பங்குனி 4, 10, 16, 17, 18, 23, 25, 26, 27, 29

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... பங்குனி 2, 3, 6, 8, 9, 11, 12, 13, 15, 17, 19, 21, 22, 26, 27, 29, 30

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... பங்குனி 2, 16, 17, 18, 21, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**

... பங்குனி 2, 14, 17, 18, 19, 23, 25, 26, 28, 29

**தேவ நீதி வெளிப்படும்**

... பங்குனி 5, 11, 13, 14, 17, 18, 20, 23, 28, 29, 30

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... பங்குனி 4, 6, 8, 10, 11, 15, 19, 21, 23, 24, 27, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... பங்குனி 1, 3, 6, 10, 15, 17, 30, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... பங்குனி 5, 6, 7, 8, 10, 11, 16, 19, 27, 30

gtachurch.ca

# இயேசுகிறிஸ்து மாறாதவர்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். மத்தேயு 8:2-3 வசனங்களில் குஷ்டரோகி ஒருவன் வந்து இயேசுகிறிஸ்து வைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான், என்று வாசிக்கிறோம்.

அந்த மனிதன் கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டான். அவனது வியாதி மிகவும் கொடியது. ஆயினும் இயேசுவின் வல்லமையும் அவரது அன்பும் எல்லாவற்றிலும் பெரியது என்று விசுவாசித்தான், அதை அறிக்கை பண்ணினான். இயேசு தனக்கு இரங்கி இலவசமாய் தன்னைச் சுகப்படுத்து வார் என்று அவரது அன்பை விசுவாசித்தான்.

கர்த்தர் அவனுக்கு என்ன செய்தார்? அவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். தம்மை விசுவாசித்த அந்த மனிதனை குணமாக்கும்படியான அவரது சித்தம் எல்லைகள் அற்றதாய், பெரிதாயிருந்தது. அதினாலே அவர் குஷ்டரோகியாயிருந்த அவனை முதலாவதாய்த் தொட்டார். அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமு ண்டு, சுத்தமாகு என்றார். அவன் குஷ்டரோகம் நீங்கிக் குணமடைந்தான். நம்மீது அன்பு செய்யும் இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாத வராயிருக்கிறார்.

எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்ச கருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது என்று பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். இயேசுகிறிஸ்துவினாலே அந்தக் கிருபை வெளிப்பட்டது. அவரே உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பி க்கிற மெய்யான ஒளியாயிருக்கிறார். அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது: இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. எந்த மனுஷனையும் பிரகாசி ப்பிக்கின்றவரான இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாத வராயிருக்கிறார்.

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைக

ளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள் வதுமில்லை. நானே நல்ல மேய்ப்பன், ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்லியுள்ளார்.

அவ்விதமாகவே அவர் நமக்காக தமது ஜீவனைக்கொடுத்து நமது பாவங் களுக்காக மரித்து, நமக்கு பாவத்திலும் பிசாசின் கட்டுகளிளுமிருந்து விடு தலை தந்தார். இயேசுகிறிஸ்து நமக்காகப் எப்போதுமே பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றவராயிருக்கிறார்.

**இயேசு நம்மை அறிந்திருக்கிறார்.**
**இயேசு நமக்கு நித்திய ஜீவனைத் தருகிறார்.**
**இயேசு நாம் கெட்டுப்போவதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை.**
**இயேசு நமக்காக தமது ஜீவனைக் கொடுத்துள்ளார்.**
**இயேசு நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.**
**இயேசுவின் கையிலிருந்து யாரும் நம்மைப் பறித்துக்கொள்ள முடியாது.**
**நமது இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.**

பிரியமான சகோதரனே சகோதரியே,

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது, உங்கள் ஆத்து மாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்று கூறி ஆறுதல் தர அழைக்கும் கர்த்தர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களாகிய தம்முடையவர்களை வானத்து நட்சத்திரங்களைப்போல் பெருகப்பண்ணும்படி கானானுக்கு அழைத்து வந்த தேவன் உண்மையுள்ள வர். கர்த்தரில் மகிழ்ந்திருங்கள். அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

## கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# நித்திய ஜீவனுக்கு ஈடு உண்டோ?

வாழ்க்கையிலே பல சவால்கள் வந்தபோதும், தங்கள் பிள்ளைகள் நன்
றாகப் படிக்க வேண்டும், தாங்கள் கடந்து வந்த கஷ்டங்களை தங்கள்
பிள்ளைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனதுடன் ஒரு தம்பதி
யினர் அயராது உழைத்து வந்தார்கள். தங்கள் மகனானவன் தலைதூ
க்கி விட்டால், வாழ்க்கையின் அன்றாட செலவுகளை இலகுவாக சந்தித்
துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்கள். ஆண்டுகள்
கடந்து சென்ற பின்பு, மகனானவன் படிப்பை முடித்த பின்பு, காரியாலய
மொன்றிலே ஒரு வேலையை பெற்றுக் கொண்டான். இந்த நிலையிலே,
அவனுடைய தகப்பனானவர், எதிர்பாராத விபத்தொன்றிலே அகப்பட்ட
தால், வேலை செய்ய முடியாதபடிக்கு அவருடைய சரீரத்திலே நோவுகள்
ஏற்பட்டிருந்தது. பல மாதங்கள் கடந்து சென்ற பின்பு, அவர்கள் வாடகை
க்கு இருந்த வீட்டுச் சொந்தக்காரன், உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட
பின்னடைவுகள் காரணமாக சில மாதங்கள் பொறுத்திருந்தேன், ஆனால்
உங்கள் வாடகைப் பணத்தை தாமதமாக செலுத்தி வருகின்றீர்கள்,
கடந்த மாதத்திற்குரிய வாடகைப் பணத்தின் பாக்கியும் இன்னும் செலுத்த
ப்படவில்லை. இது இப்படியே நீடிக்குமாக இருந்தால், இந்த மாதத்துடன்
வேறு இடத்தை பார்ப்பது நல்லது என்று தகப்பனானவரிடம் கூறினார்.
இன்று எங்களுடைய மகனுடைய சம்பள நாள், அவன் வீடு திரும்பியதும்,
அந்தப் பணத்தை உங்களிடம் தவறாமல் செலுத்தி விடுவோம் என்று
தாயானவள் வீட்டு சொந்தக்காரனை வேண்டிக் கொண்டாள்.

மாலையிலே வீடு திரும்பிய மகனானவன், தன் சம்பளக் காசை தன் தக
ப்பனானவரிடம் கொடுத்தான். தகப்பனானவர் மகனை நோக்கி: மகனே,
பணம் வழமையான சம்பளத்திற்கு மிக அதிகமாக இருக்கின்றதே, இவ்
வளவு பணம் உனக்கு எப்படி கிடைத்தது என்று ஆச்சரியத்தோடு கேட்
டார். அது, ஒன்றுமில்லை அப்பா, நேற்று ஒரு முக்கியமான கிரிகெட்
போட்டி ஒன்று நடை பெற்றது. காரியாலயத்திலே வேலை செய்யும் சக
ஊழியர்கள் சிலர் கணணி வலைத்தளத்தினூடாக பந்தயம் (Betting) கட்டி
யிருந்தார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து என் சம்பளத்தை பந்தயம்
கட்டினேன். நான் பந்தயம் கட்டிய அணி ஜெயித்ததால் எனக்கு இரண்டு
மடங்கு பணம் கிடைத்தது என்று கூறினான். தான் கேள்விப்படுவதை நம்
பமுடியாத நிலையுடன் அவன் தகப்பனானவர் அவனை நோக்கி: அப்படி
யானால், நீ பந்தயம் கட்டிய அணி தோல்வியடைந்திருந்தால் என்ன
நடந்திருக்கும் எனக் கேட்டார். ஏன் அப்பா, நடக்காத ஒன்றைக் குறித்து
அலட்டிக் கொள்கின்றீர்கள். நான்தான் ஜெயித்துவிட்டேனே என்றான்.
தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, வீட்டு வாடகையும் அதன்
கடந்த மாதத்தின் பாக்கியும் கட்ட வேண்டும், என்னுடைய மருத்துவ
செலவுகள் ஒருபக்கம், உன் தங்கச்சிக்கு கல்லூரி பணம் கட்ட வேண்
டும், குடும்பம் தினந்தோறும் உண்ண வேண்டும் என்று நாங்கள் யாவரும்
உன்னை நம்பியிருக்கின்றோம் என்று நீ அறிந்திருந்தும், உன் சம்பள
த்தை சூதாட்டத்திலே போடுவதற்கு எப்படி உனக்கு மனம் வந்தது? நீ
எங்கள் வாழ்க்கையை சூதாட்டத்திலே பந்தயப் பொருளாக வைத்தாயே,
எங்கள் வாழ்க்கை உனக்கு அவ்வளவு அற்பமாக தோன்றியதா என்று
தகப்பனானவர் மனவேதனையோடு கேட்டார்.

சில மனிதர்கள், தங்கள் வாழ்க்கையிலே ஏதாவது ஒன்றை அடையும்ப டிக்கு, தமது வாழ்க்கையில் உள்ள ஒரு சில காரியங்களை இழந்து விடுவதற்கோ அல்லது மற்றவர்கள் வாழ்க்கையிலுள்ள ஏதாவது காரியங் களை பணயம் வைப்பதற்கோ ஆயத்தமாக இருக்கின்றார்கள். எந்த காரியத்திற்காக நம் வாழ்க்கையிலுள்ள எவற்றை நாங்கள் பணயம் வைக்கின்றோம் என்று நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்திலே, மகனானவனுடைய குறித்த மாதத் திற்குரிய சம்பளத்தை இழந்து போனால், அந்தக் குடும்பத்தினர், வாட கைப் பணத்தை செலுத்த முடியாது போனால், அவர்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும். தகப்பனானவரின் மருத்துவ சிகிச்சைக்குரிய கட்ட ணங்கள் செலுத்துப்பட வேண்டும், அதை செலுத்தாவிடின், தகப்பனாரின் உயிருக்கு ஆபத்து வரலாம். தங்கச்சியின் கல்லூரி கட்டணம் செலுத் தப்படாவிடின், அவளது படிப்பு பாதியில் நிறுத்தப்படும். இப்படியாக அந்த குடும்பத்தினர் ஒரு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படலாம். அதை அறி ந்திருந்தும் குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய அந்த நிர்க்கதியான நிலையை குறித்து பொருட்படுத்தாமல், அதை பணயமாக வைத்து, அந்த மகனான வன் தன் சம்பளப் பணத்தை பந்தயம் கட்டினான்.

ஒரு மனிதன் மீட்பராகிய இயேசு கிறிஸ்து வழியாக உண்டாகும் பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொள்ளாதிருந்தால், அவன் ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், துன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், சன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், உலக அளவுகோ லின்படி கற்றவனாக இருந்தாலும், கல்லாதவனாக இருந்தாலும், மத வைராக்கியமுள்ளவனாக இருந்தாலும், மத வைராக்கியமற்றவனாக இரு ந்தாலும், கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும், கடவுள் நம்பி க்கையற்றவனாக இருந்தாலும், உலகத்திலே அதிகாரமுள்ளவனாக இரு ந்தாலும், அதிகாரமற்றவனாக இருந்தாலும், உலக கணிப்பின்படி நன்மை செய்கின்றவனாக இருந்தாலும், தீமை செய்கின்றவனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் அவனுக்குள் பாவத் தின் வித்து இருப்பதால் அவன் கோபாக்கினைக்கு நியமிக்கப்பட்டவனாக இருக்கின்றான். நாமும் அவ்வண்ணமாகவே, அக்கிரமங்களினாலும் பாவ ங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம். தேவனானவர் நம்மை உயிர்ப்பி த்தார். அவைகளில் நாம் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நட ந்து கொண்டோம். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பி னவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக் கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமு ள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக் கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப் பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வத ற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்ன தங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. இந்த உன்னதமான இரட்சிப்பை

உண்டு பண்ணும் பொருட்டு, இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய விலைமதிக்க முடியாத பரிசுத்த இரத்தத்தை சிந்தி, மனித குலத்தின் பாவ பரிகாரத்தை செய்யும்படி, தம்மை தாமே கிரயமாக ஒப்புக் கொடுத்து, சிலுவையிலே பலியானார். (எபேசியர் 2:1-8)

ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், துன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், சன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், உலக அளவுகோலின்படி கற்றவனாக இருந்தாலும், கல்லாதவனாக இருந்தாலும், மத வைராக்கியமுள்ளவனாக இருந்தாலும், மத வைராக்கியமற்றவனாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கையற்றவனாக இருந்தாலும், உலகத்திலே அதிகாரமுள்ளவனாக இருந்தாலும், அதிகாரமற்றவனாக இருந்தாலும், உலக கணிப்பின்படி நன்மை செய்கின்றவனாக இருந்தாலும், தீமை செய்கின்றவனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்றவன் எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, பிதாவாகிய தேவன்தாமே ஜீவ மார்க்கத்தை உண்டுபண்ணினார்.

இந்த உன்னதமான அழைப்பை ஏற்றுக்கொண்டு, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்கள் யாவரும் பரலோக ராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாகும்படியான வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கின்றோம். இந்த இரட்சிப்பினால் உண்டாகும் கன மகிமையை சற்று சிந்தித்துப் பாருங்கள்:

**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 1:9)**

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. (ரோமர் 8:14-17)

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன் நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்

கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் நாமும் மறுரூபமாக்கப்படுவோம். (1 கொரி 15:51-52)

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் (1 யோவான் 3:1)
இத்தகைய ஒப்பற்ற அழைப்பை பெற்ற நாம். எவ்வளவாய் ஜாக்கிரதையுள்ளவர்ளாக வாழ வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபிரெயர் 2:4)

இந்த மகத்துவமான அழைப்பை இன்று சிலர் பணயம் வைத்து, மறுபடியும் தங்களை பாவத்திற்கு அல்லது பாவத்திற்கு வழிவகுக்கும் காரணிகளுக்கு ஒப்புக் கொடுக்கின்றார்கள். அதாவது, பரலோகத்திலே நித்திய வாழ்வை இழந்து போகக்கூடிய நிலைமை ஏற்படலாம் என்று அறிந்தும் தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற இடங் கொடுக்கின்றார்கள். அதன் முடிவில் நித்திய மரணத்தை பெற்றுக் கொள்வதற்காக, நித்திய வாழ்வை அற்ப காரியங்களுக்காக விற்று விடுகின்றார்கள்.

ஒரு ஊரிலே வசித்து வந்த சில வாலிபர்கள் ஒன்று சேர்ந்து, கடற்கரையோரமாக சென்று, கடலிலே குளித்து, உன்று, குடித்து உல்லாசமாக இருப்போம் என்று திட்டமிட்டார்கள். அந்த கடற்கரையோரத்திலே, சில வேளைகளிலே முதலைகள் வந்து சேருவதால், அங்கு செல்வது ஆபத்தானது என ஊர் மக்கள் அறிந்திருந்தார்கள். அந்த வாலிபர்கள், அங்கு செல்வது நல்லதல்ல என்று அந்த ஊரிலுள்ள மூப்பர்களில் ஒருவர் அவர்களுக்கு நல் ஆலோசனை கூறினார். அந்த வாலிபர்களில் ஒருவன் அவரை நோக்கி: கடந்த இரண்டு வருடங்களில் எத்தனை முறை அங்கு முதலைகள் வந்தது? எத்தனை பேரை கொன்று போட்டது? அப்படியாக ஏதும் ஊரில் நடக்கவில்லையே. பின்னர் ஏன் மக்களை பயமுறுத்தி அடக்கி ஆளுகின்றீர்கள் என்று கூறினான். அந்த வாலிபர்கள் மாதந்தோறும், ஒரு சனிக்கிழமையன்று கடற்கரைக்கு சென்று தாங்கள் விரும்பியபடி, முழுகி, மதுபானம் அருந்தி, உண்டு, உல்லாசமாக இருந்து வருவது வழக்கமாயிற்று. பல மாதங்களாக அவர்கள் போக்கும் வரத்துமாக இருந்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் அங்கு சென்று நீந்துகின்ற வேளையிலே, முதலைகளால் தாக்கப்பட்டார்கள், சிலர் படு காயங்களோடு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்கள், ஆனால் சிலரை அந்த முதலைகள் கொன்று போட்டது. இந்த வாலிபர்கள் தங்கள் அற்ப ஆசைகளை நிறைவேற்றும்படிக்கு தங்கள் உயிர்களை பணயம் வைத்தே சென்றார்கள்.

இதற்கொத்ததாகவே இன்று சில மனிதர்கள், தேவ அழைப்பைப் பெற்றும், காலங்கள் கடந்து செல்லும் போது, தேவ ஆலோசனைகளை அற்பமாக எண்ணிக் கொள்கின்றார்கள்.

அவற்றுள் சில உதாரணங்கள்: மதுபானம் அருந்துவதில் என்ன தவறு? நெறிகெட்ட திரைப்படங்களை பார்த்தால் என்ன? நான் விரும்பிய நபரை என் இஷ்டப்படி திருமணம் செய்து கொண்டால் என்ன? ஞாயிறு ஆராதனைக்கு செல்லாவிட்டால் தேவன் என்னை கொன்று விடுவாரோ? என்று கேள்விகளுக்கு மேல் கேள்விகளை கேட்கின்றார்கள்.

**இப்படி கேள்விகளை கேட்கின்றவர்கள், தங்களிடம் தாங்களே கேட்க வேண்டிய ஒரு கேள்வி ஒன்று உண்டு.**

**நான் நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ள வாஞ்சையாக இருக்கின்றேனா அல்லது நித்தி வாழ்வை பணயம் வைத்து அற்ப காரியங்களை நிறைவேற்ற ஆசையாக இருக்கின்றேனா?**

வழுவிப் போகின்ற இதயமுள்ளவர்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற வகை தேடுவார்கள். நித்திய வாழ்வின் மேன்மையை அறிந்தவர்கள், அதை பெற்றுக் கொள்ளும்படி, தேவனுக்கு சித்தமானால் தங்கள் உயிரை கொடுப்பதற்கும் ஆயத்தமாயிருப்பார்கள்.

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன் என்று தேவ ஊழியராகிய பவுல் தனக்கிருந்த உலக கல்வி, அந்தஸ்து யாவும் உதறித்தள்ளிவிட்டார். (பிலிப்பியர் 3:7-11)

வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள். வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு

அலைந்தார்கள். இவர்கள் தங்கள் உன்னதமான அழைப்பை வாழ்விலும் சாவிலும் இழந்து போகாதபடிக்கு தங்கள் விசுவாசத்தை காத்துக் கொண்டார்கள். (எபிரெயர் 11:35-38)

அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லா வற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் என்று நம்முடைய ஆண்ட வராகிய இயேசு கூறியிருக்கின்றார். (மத்தேயு 13:44-46)

இன்று நாம் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களானால், நாம் பேசும் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும், இருதயத்தின் தியானமும் நித்திய வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு ஏற்றனவைகளாக இருக்க வேண்டும். சிறிதானவைகளாயிருந்தாலும், பெரிதானவைகளாக இருந்தாலும், மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் பொருட்டு, நித்திய வாழ்வை பணயம் வைக்காதிருப்போமாக. அழிந்து போகும் இந்த உலக காரியங்களுக்காக, நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவ னுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின இயேசுவை விற்றுப் போடாதிருப்போமாக. அவரே நம்முடைய இரட்சிப்பின் தேவனா னவராய் இருக்கின்றார்.

ஆண்டவராகிய இயேசு இந்த பூமியிலே தம்முடைய திருப்பணியை நிறை வேற்றும்படிக்கு பன்னிரண்டு விசேஷித்த சீஷர்களை தெரிவு செய்திரு ந்தார். அவர்களில் ஒருவன் யூதாஸ்காரியோத்து. மற்றய சீஷர்களைப் போல, இவனும் இயேசுவோடு சுமார் மூன்றரை வருடங்கள் இருந்தவன். இயேசுவின் போதனைகளையும், அவர் செய்த அற்புதங்களையும் நேரடி யாக கேட்டவன், பார்த்தவன். இயேசுவோடு உணவு உண்டவன். ஒரு சம யம், இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தா னியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள். லாசருவின் சகோதரியாகிய மார்த்தாள் பணிவிடை செய்தாள். லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது லாசருவின் மற்றய சகோதரியாகிய மரியாள் விலையேறப்பெற்ற களங்க மில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமள த்தினால் நிறைந்தது. அதைக் கண்ட யூதாஸ்காரியோத்து: இந்தத் தைல த்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதெ ன்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல் லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன் னான். (யோவான் 12:1-6). மற்றய சீஷர்களைப் போல, இவனும் வியாதி யுள்ளவர்களைச் சொஸ்தமாக்கவும், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ண வும், மரித்தோரை எழுப்பவும், பிசாசுகளைத் துரத்தவும் ஆண்டவராகிய இயேசுவிடமிருந்து அதிகாரம் பெற்றிருந்தும் (மத்தேயு 10:8). பொருளா

சையை தன் இருதயத்தில் தங்க இடங் கொடுத்தவன். அந்த பொரு ளாசை வழியாக பிசாசானவன் அவனுக்குள் உட்புகுந்தான்.

அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான். அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள். அதற்கு அவன் சம்மதித்து, ஜனக்கூட்டமில்லாத வேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயந்தேடினான். அதாவது, அவன் தற்செயலாக இயேசுவை காட்டிக் கொடுக்கவில்லை. மாறாக திட்டமிட்டு, ஆலோசனை பண்ணி, சந்தர்ப் பத்தை தேடிக் காத்திருந்து, இயேசுவை காட்டிக் கொடுத்தான். அவன் இயேசுவை பணத்திற்காக பந்தையம் கட்டினான். அவரை முப்பது வெள் ளிக் காசுக்கு விற்றுவிட்டான். உலக போக்கிலே அங்கீகாரம் பெற்றிரு க்கும் பொருளாசையின் முடிவை பாருங்கள். உன்னத அழைப்பை கொடு த்த உன்னதருக்கே துரோகம் செய்து, முடிவிலே அவன் தன் உயிரையே மாய்த்துக் கொண்டான்.

பிரியமான சகோதர சகோதரிகளே, உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவ னிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத் தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவ னுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திரு ப்பான். (1 யோவான் 2:15-17)

## கிறிஸ்துவுக்காக இந்த உலக மேன்மைகளை துறந்தவர்களும், இழந்தவர்களும் ஒருபோதும் தரித்திரராவதில்லை.

ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? மனுஷகுமாரன் தம்மு டைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார் அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். (மத்தேயு 16:25-27)

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்க ளின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவர் கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களை ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி வழிநடத்திச் செல்வாராக. **ஆமேன்**!

# அநாதி தேவன் உன் அடைக்கலம்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - உபாகமம் 33:27

சில வேளைகளிலே, மனிதர்கள் தங்களை குறித்து பேசும் போது, தங்கள் பூர்வீகங்களைக் குறித்தும், தாங்கள் இன்னாருடைய பிள்ளைகள் என்றும், அதனால் தங்களுக்கு இருக்கும் சலுகைகளையும் சொல்லிக் கொள்வார்கள். அப்படி அறிக்கையிடுவதால், தாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் ஒருவரும் எங்களை அணுக முடியாது என்று மனதிலே ஒரு திருப்தி அடைகின்றார்கள். இவ்வண்ணமாக நாம் "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" என்று சொல்லிவிட்டு, நாம் நினைத்த பிரகாரம் வாழ முடியாது.

ஒரு வாலிபன் ஒரு போலிஸ் அதிகாரியின் மகனாக இருந்தால், அவன் தன் தகப்பனுடைய பெயருக்கு பங்கம் ஏற்படாதபடிக்கு தன் வாழ்க்கையை வாழ வேண்டும். அவனுடைய தகப்பனானவர், அவன் வாழ்க்கைக்கு விரோதமாக வரும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் அதிகாரம் உள்ளவராக இருக்கின்றார். ஆனால், அவன் தன் வாழ்வை பொல்லாப்புக் விலக்கி காத்துக் கொள்ள வேண்டும். அவன் தவறான செயல்களை செய்து, குற்றத்தில் அகப்படும் போது, நீதிபதிக்கு முன்பாக நின்று நான் இன்னாருடைய மகன் என்று சொல்லிக் கொள்வதால் பலன் ஏதும் இல்லை.

அதைப் போலவே, தேவனுடைய ஊழியராகிய மோசே, தேவ ஜனங்களைப் பார்த்து, இந்த பூமியிலே நீ அநேக காரியங்களை காண்பாய் ஆனால் "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" என்பதை நீ அறிந்து உணர்ந்து, அந்த அடைக்கலத்திற்குள் உன்னை வைத்துக் கொள் என்று ஆலோசனை கூறினார்.

இந்த பூமியிலே மனிதர்களில் அநேகர் தங்கள் வாழ்க்கையிலே அநேக துன்பங்களை எதிர் நோக்குகின்றார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள், ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் என்று முன்கூட்டியே நடக்கவிருக்கும் காரியங்களை குறித்து கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் அவன் வாழ்க்கையில் துன்பம் வராது என்று பரிசுத்த வேதாகமம் கூறவில்லை. மாறாக, கிறிஸ்துவின் நிமித்தம் நாம் பாடுகளை சகிக்க வேண்டும் என்றே எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வண்ணமாக, முன்னோடிகளாகிய பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலே பல துன்பங்களும் பாடுகளும் உண்டாயிருந்தது. அவர்களில் ஒருவராகிய பவுல், கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்ததாலும், தேவனுக்கு பிரியமான பரிசுத்த வாழ்வை பற்றியும் அவர்

பேசியதால், மனிதர்களும் அதிகாரிகளும் தங்கள் மனதிலே குத்துண்டு, அவரை அதிகமாக துன்பப்படுத்தினார்கள்.

நாங்கள் தேவனை அறிந்திருக்கின்றோம் என்று கூறி, அறியாமையில் வாழ்ந்து வந்த மனிதர்களே, பவுலை அதிகமாக உபத்திரப்படுத்தினா ர்கள். நாம் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண் டாயிற்று. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாங்கள் தேவனையே நம்பியிருந்தோம் என்று அவர் சாட்சி பகர்ந்திருக்கின்றார். பரிசுத்தவான்க ளில் அநேகர், கிறிஸ்துவின் நிமித்தம் உபத்திரவப்படுத்தப்பட்டு இரத்த சாட்சிகளாக கொடூரமாக கொல்லப்பட்டார்கள். ஆனால், தங்களை தேவன் ஒருபோதும் தேவன் மறந்து போகின்றவர் அல்லர் என்பதை அவர் கள் நன்றாக அறிந்திருந்ததால் "அநாதி தேவனே எனக்கு அடைக்கலம் அவ ருடைய நித்திய புயங்கள் எனக்கு ஆதாரம்" என்ற அந்த வாக்குத் தத்தத்திலே உறுதியாக தரித்திருந்தார்கள்.

அப்படியாக கொல்லப்பட்டவர்களின் கதை முடிந்து விட்டதே என்று சிலர் எண்ணிக் கொள்ளலாம். சற்று சிந்தித்துப் பாருங்கள்! நூற்றியிருபது வருடங்களுக்கு முன் வாழ்ந்த உங்கள் முற்பிதாக்கள் இப்போது பூமியில் இல்லை. அவர்கள் இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களைவிட, இந்தப் பூமியில் இல்லாதிருக்கின்ற நாட்கள் அதிகமாக இருக்கின்றது. அதுபோ லவே நாமும் கொஞ்சக் காலம் இந்தப் பூமியிலே வாழ்கின்றோம். கர்த்தர் வரத் தாமதமானால் நாம் இந்த பூமியில் இல்லாதிருக்கின்ற வரு டங்கள் நாம் இந்த பூமியில் வாழ்ந்த வருடங்களைவிட அதிகமாக இருக் கும். ஆனால் ஒரு மனிதன் தேவனை தன் அடைக்கலமாக கொண்டு, அவரு டைய கற்பனைகளின்படி வாழ்ந்தால், அவன் இந்தப் பூமியில் இருந்தால் என்ன இல்லாதிருந்தால் என்ன அவன் என்றென்றும் தேவனோடு இரு ப்பான்.

வாழ்நாட்களிலே நாம் அநேக துன்பங்களை எதிர்நோக்கினாலும், அநாதி தேவனே நமக்கு அடைக்கலமாக இருக்கின்றார். அவரை நம்பியிருக்கி ன்றவர்களை அவர் முடிவிலே தமது தேவ ராஜ்யத்திற்கு கொண்டு போய் சேர்ப்பார்.

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துதாமே, தமக்கு முன்பாக இருந்த பாடு களை அறிந்திருந்த போதும், அவற்றை பிதாவின் சித்தப்படி, மனிதகு லம் இரட்சிப்படையும்படி, தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். அதே போலவே, அந்த இரட்சிப்பின் நற்செய்தி, உலகம் முழுவதும் அறிவிக்க ப்படத்தக்கதாக, இயேசுவின் சீஷர்களும் தங்களை கிறிஸ்துவின் திரு ப்பணிக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பல துன்பங்கள் உபத்திரவங்கள், நாச மோசங்கள், அவமானங்கள், நிந்தை கள் மத்தியிலும் சோர்ந்து போகாமல் தங்கள் பிரயாசத்தின் பலனை கண்டு ஆறுதலடைந்தார்கள். இவர்கள் தாமே அநாதி தேவனை தங்கள் அடைக்கலமாக்கிக் கொண்டார்கள். அதுபோலவே நாமும் என்ன நடந் தாலும் அநாதி தேவனை நம் அடைக்கலமாகவும், அவருடைய நித்திய புயங்களை நம் ஆதாரமாகவும் கொண்டிருப்போமாக.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்

இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)

தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# எனக்கு ஒத்தாசை வரும்

இரட்சகராகிய இயேசு, இந்த உலகிலே, தம்முடைய திருப்பணியை ஆரம்பிக்கும் நாட்களிலே, அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்தார். உபவாச நாட்கள் முடிந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. பசி உண்டாகும் வேளையிலே உணவானது ஒரு அத்தியவசியமான அடிப்படைத் தேவையாகும். அந்த சமயத்திலே, சோதனைக்காரனாகிய பிசாசானவன், அந்த அத்தியாவசியமான தேவையை மையமாக வைத்து, இயேசுவின் சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் தேவையை குறித்து கரிசனையுள்ளவன் போல இயேசுவினிடத்தில் வந்தான். நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். சற்று இந்த சம்பவத்தை உங்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டு சிந்தித்துப் பாருங்கள். ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விவசாயி, தன் சிறு தோட்டத்திலே விளையும் காய்கறிகளையும், வாழைப்பழங்களையும் ஊரிலே இருக்கும் சிறிய சந்தைக்கு கொண்டு சென்று, விற்று தன் அனுதின தேவைகளை சந்தித்து வந்தான். ஒரு நாள் அவன் வாழ்விலே ஒரு அத்தியாவசியமான பணத்தேவை ஏற்பட்டுவிட்டது. சனி இரவு, அவனுடைய நண்பன் ஒருவன் அவனிடத்தில் வந்து, நாளை ஞாயிற்றுக்கிழமை, சந்தையிலே அதிக ஜனங்கள் வருவார்கள். அருகிலுள்ள ஊர் ஜனங்களும் அங்கே வருவார்கள். ஆகவே, உன்னுடைய அடிப்படை தேவையை மையமாக வைத்து, இந்த ஞாயிறு மட்டும் நீ ஆலயத்திற்கு போகாமல், சந்தைக்கு போ. சந்தையில் உன் தேவைக்கு அதிகமான பணத்தை நீ சம்பாதிக்கலாம். அதனால் வரும் ஆதாயத்தில் நீ அதிகமாக தேவனுக்கு கொடுக்கலாம் என்று ஆலோசனை கூறினான். சோதனைக்காரனாகிய பிசாசானவன், இயேசுவுக்கு கூறிய ஆலோசனையைப் போலவே, இந்த ஆலோசனையும் இந்த உலகத்தின் பார்வையில் ஏற்புடையதாக இருந்தது. ஆனால், அந்த விவசாயியோ, நண்பனே, ஞாயிறு சந்தையில் இருந்து அல்ல, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு உதவி வரும். நான் உழைப்பதற்கு ஆறு நாட்கள் உண்டு எனவே என்னை படைத்த தேவனை ஆராதிக்கும் நேரம் வியாபார நேரம் அல்ல என்று தயவாக பதில் கூறினான். பிரியமானவர்களே, தேவனுடைய வழிகளை அறிந்து கொள்ளுங்கள். இந்த உலகத்தினால் உண்டாகும் ஆலோசனைகளை குறித்து மிகவும் விழிப்புள்ளவர்களாக இருங்கள்.

**சங்கீதம் 121:1**

**எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் ஆலோசனைகளை நிதானித்து அறிந்து அவைகளை ஜெயம் கொள்ளும்படிக்கு பிரசாமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாச வாழ்க்கை

இக்கட்டும் நெருக்கமும் மனிதர்களுடைய வாழ்க்கையை சூழ்ந்து கொள்வது சகஜம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே மனிதர்களுடைய மனதிலே பயமும் வேதனையும் பற்றிக் கொள்கின்றது. நாளைய நாளை எப்படி சந்திக்கப் போகின்றேன்? பிள்ளைகளுக்கு எப்படி ஆகாரம் கொடுப்பேன்? யார் எனக்கு வேலை தருவார்கள்? தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையிலிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது? என்று பலவிதமாக கேள்விகள் மனதிலே தோன்றும் வேளையிலே, நீங்கள் தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தை கிரியைகளிலே காண்பியுங்கள். தேவன்மேல் நாம் கொண்டுள்ள விசுவாசம் தேவ வார்த்தைகளுக்கு முரணாக செயற்படமாட்டாது. இக்கட்டான சூழ்நிலைகளை சந்திக்கும் போது, தேவனுடைய வாக்குத்தத்தங்களை பற்றிக் கொள்ளுங்கள். உங்களை சூழ்ந்திருக்கும் பிரச்சனைகளையும், அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளையும் பற்றி தியானம் செய்வதை நிறுத்திவிட்டு சத்திய வேதத்திலுள்ள விசுவாச வீரர்களையும், அவர்களின் சாட்சியான வாழ்க்கையையும்பற்றி தியானியுங்கள். எலியாவின் நாட்களிலே, மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. இதனால் இஸ்ரவேலிலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அந்த பஞ்சத்தினால், எலியாவிற்கும் ஆகாரம் இல்லாமற் போயிற்று. ஆனால், அந்த நாட்களிலும் தம்முடைய தாசனாகிய எலியாவை தேவன் போஷிப்பதற்கு வழியை ஏற்படுத்தினார். தேவனாகிய கர்த்தர்தாமே, எலியாவை பராமரிக்கும்படி சாறிபாத் ஊரிலுள்ள ஒரு விதவைக்கு கட்டளையிட்டார். கொடிய பஞ்சகாலத்திலே, வழி ஏதும் இல்லாத ஒரு ஏழை விதவை எப்படி எலியாவை பராமரிப்பாள்? இது மனிதனுடைய பார்வையிலே சாத்தியமற்றது ஆனால் தேவனாலே எல்லாம் கூடும். அது போல, உங்களைச் சூழ்ந்திருக்கும் பிரச்சனைகளை மனித கண்களினாலே நோக்குவீர்களாக இருந்தால், நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளே உங்களை மேற்கொண்டுவிடும். ஆனால், தேவனுடைய வார்த்தையின் ஊடாக, விசுவாசக் கண்களால் அதைப் நோக்குவீர்களாக இருந்தால், நீங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், உங்கள் வாழ்க்கை வழியாக பிதாவாகிய தேவனுடைய நாமம் மகிமைப்படும். நீங்கள் உங்கள் ஆத்துமா ஈடேறும்படி நம் தேவனில் விசுவாசிகளாயிருக்கிறீர்களே.

**எபிரெயர் 10:38**

**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.**

**ஜெபம்:** அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்று கூறிய தேவனே, இக்கட்டும் நெருக்கமுமான வேளைகளிலே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆன்மீக போஜனம்

ஆடு, மாடு போன்ற அசைபோடுகின்ற (இரைமீட்கின்ற) மிருகங்களை குறித்து நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஒரு மாடு, புல்லை மேய்கின்ற வேளையிலே, அது முற்றாக அதன் தீவனத்தை அசைபோடாமல், வயிற்றின் ஒரு குறிப்பிட்ட பகுதியை நிரப்பிக் கொள்ளும். பின்பு, அந்த மாடு ஓய்ந்திருக்கும் போது, அது உட்கொண்ட புல்லை மறுபடியும் அசைபோட்டு செமிக்கச் செய்யும். இதற்கு ஒப்பனையாகவே நம்முடைய வாழ்வில் வேத வாசிப்பும் தியானமும் இருக்க வேண்டும். நாம் தினமும் வேதத்தை வாசிக்க வேண்டும். நாம் செல்லும் சபையிலே தேவ வார்த்தைகள் பிரசங்கிக்கப்படும் போது அவைகளை கேட்க வேண்டும். தேவ வார்த்தைகளை நாம் வாசித்த பின்பு அல்லது கேட்ட பின்பு, இனி அடுத்த கிழமை வாசிப்போம், அடுத்த கிழமை கேட்போம் என்று அப்படியே அதைவிட்டுவிடக் கூடாது. அதனால் நமக்கு பலன் ஒன்றுமில்லை. மாறாக தேவ வார்த்தையை வாசிக்கும் போதும், கேட்கும் போதும், நாம் அந்த வார்த்தைகளை கிரகித்து, புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், எல்லா வேளைகளிலும் எல்லா வார்த்தைகளையும் நாம் உடனடியாக புரிந்து கொள்ள முடியாது. எனவே, நாம் வாசித்த, கேட்ட வார்த்தைகளை மறுபடியும் தியானிக்க வேண்டும். அந்த வார்த்தைகளை நாம் மறந்து போகாதபடிக்கு அவைகளைப் பற்றி நாம் அடிக்கடி பேசிக் கொள்ள வேண்டும். நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரைப் பற்றிக்கொண்டிருக்கும்படி, நான் உங்களுக்குச் செய்யக் கற்பிக்கிற இந்தக் கற்பனைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கைக்கொள்வீர்களானால் பெரிதான ஆசீர்வாதங்களை நீங்கள் கண்டடைவீர்கள் என தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார்.

**உபாகமம் 11:20**

**நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக.**

**ஜெபம்**: நித்திய வாழ்வு தரும் வார்த்தைகளையுடைய தேவனே, நீர் கூறியிருக்கும் ஜீவ வார்த்தைகளின் மேன்மையையும், அதன் அவசியத்தையும் அறிந்து கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக.. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

ஒரு மனிதன் தன் வீட்டிற்குப் பின்புறமாக ஒரு மாமரத்தை நாட்டி அதை பராமரித்து வந்தான். அதன் கனி மிகவும் புளிப்புள்ளதாயும், உண்பதற்கு ஏற்றதாயும் இருக்கவில்லை. அடுத்த ஊரிலுள்ள அவனுடைய நண்பன், தன் ஊரிலுள்ள மிகவும் சுவையான கனியைக் கொடுக்கும் ஒரு மாமரத்தை அவனுக்கு கொடுத்தான். அது சிறிய கன்றாக இருந்ததால், அதை நன்றாக வேலியடைத்து பராமரிக்கும்படி கூறியிருந்தான். அந்த மனிதனும் அந்த சிறிய மாமரத்தை வீட்டின் பின்புறத்திலே நாட்டி, வேலியடைத்து பராமரித்து வந்தான். ஆனால், அவன் தன் தோட்டத்தில் இருந்த புளிப்புள்ள, உண்பதற்கு ஆகாத மாமரத்தை வெட்டிவிடாமல், அதையும் பசளை போட்டு, நீர்பாய்ச்சி பராமரித்து வந்தான். அந்த மரம் பெரியதாக இருந்ததால், அவன் புதிதாக நாட்டிய சிறிய மாங்கன்றுக்கு போதியளவு சூரிய ஒளியோ, பசளையோ, தண்ணீரோ கிடைக்கவில்லை.அவன் தோட்டத்திலிருந்த புளிப்புள்ள மாமரமோ செழித்து வளர்ந்தது. சுவை தரும் மாங்கனியைத் தரும் மரமோ, வளர்ச்சி குறைந்த சிறிய கன்றாகவே இருந்தது. பிரியமானவர்களே, நீங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட நாளிலே, தேவனுடைய பரிசுத்த வித்து உங்கள் இருதயத்தில் விதைக்கபட்டது. அந்த வித்து வளர்ந்து கனி கொடுக்கும் போது, அதன் பலனில் எந்த குறைவும் இருக்காது. அந்த வித்திலிருந்து பாவம் உண்டாகாது. ஆனால், உங்கள் இருதயத்திலிருந்த அழிவுள்ள பலனைக் கொடுக்கும், பகை, வன்மம், கசப்பு போன்ற பழைய மனுஷனுக்குரிய சுபாவத்திற்கு நீங்கள் பசளை போட்டு, தண்ணீர் ஊற்றி வளர்க்கக் கூடாது. அதாவது, புதிய மனுஷனுக்குரிய பரிசுத்த வித்து உங்களுக்குள் இருக்கின்றது. பழைய மனுஷனுக்குரிய சுபாவம் அழிந்து போகும்படிக்கு, அதை நீங்கள் பராமரிப்பதை விட்டுவிடுங்கள். புதிய மனுஷனுக்குரிய தெய்வீக சுபாவம் உங்கள் வாழ்வை ஆண்டு கொள்ள இடங்கொடுங்கள். நீங்கள் எதை கருத்துடன் பராமரிக்கின்றீர்களோ, அது உங்களுக்குள் வளர்ந்து அதன் பலனை கொடுக்கும். எனவே, அந்தப்படி, முந்தின நடக்கைக் குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து விடுங்கள். புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 4:24**

**மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** அன்புள்ள பரம தந்தையே, நற்கனிகளைக் கொடுக்கும் வாழ்க்கை வாழும்படிக்கு, பழைய மனுஷனுக்குரிய சுபாவங்களை களைந்து, கிறிஸ்துவின் சாயலில் வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிலையான நகரம் நமக்கிங்கில்லை

ஆண்டவராகிய இயேசு வழியாக மீட்பை பெற்ற பின்பும், பாவம் செய்கின்ற பழைய மனுஷனுடைய சுபாவத்தை எப்படியாக தேவ அழைப்பை பெற்றவர்கள் தங்கள் வாழ்வில் வளர்த்துக் கொள்கின்றார்கள் என்பதைப் பற்றி சில காரியங்களை பார்ப்போம். உண்மையை பேசுவதற்கு பதிலாக, தங்கள் செய்கைகளை நியாயப்படுத்த பொய்யை பேசுவதற்கு தங்களைத் தாங்களே பயிற்றுவிக்கின்றார்கள். கோபத்தை விட்டு விடாமல், தங்கள் மாம்சத்திலே மற்றவர்களை ஜெயிக்கும்படிக்கு கோபத்தை பற்றியெரிய விட்டுவிடுகின்றார்கள். நேரடியாக களவு செய்யாவிடினும், நீதியாக உழைப்பதற்கு பதிலாக அநீதியாக பணத்தை தக்கவைக்கும் வழிகளை கைக்கொள்கின்றார்கள். பழைய உறவுகளையும் நண்பர்களையும் விட்டுவிடாமலிருப்பதால், அவர்களோடு கெட்ட வார்த்தைகளை பேசிக் கொள்கின்றார்கள் அல்லது அந்த வார்த்தைகளை பழைய நண்பர்களும், பழைய உறவுகளும் பேசும் போது, அவைகளை கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனால், அந்த கெட்ட வார்த்தைகள் இவர்களுக்கு ஒரு குற்றம் போல தோன்றுவதில்லை. வாழ்க்கையிலே ஏற்படும் கருத்து முரண்பாடுகளை, தேவ வார்த்தையின்படி தீர்த்து கொள்வதற்கு பதிலாக, அவைகளை சண்டைகளாக மாற்றி, தங்கள் மாம்சத்திலே போராட்டங்களை நடப்பிக்கின்றார்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், துர்க்குணமும் போன்றவைகளை தங்கள் போராயுதங்களாக பயன்படுத்துகின்றார்கள். இவைகளினாலே, மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்துகின்றார்கள். இவைகள்யாவுமே, ஜென்ம சுபாவத்திற்குரிய பழைய மனுஷனுக்குரிய சுபாவங்களை நம்மில் வளர்வதற்கு நாம் கொடுக்கும் பழைய மனுஷனுக்குரிய ஆகாரமாயிருக்கும். பிரியமானவர்களே, கோபம், மூர்க்கம், கூக்குரல் சண்டை போன்றவை மாம்சத்தின் பெலன். புதிய மனுஷனுடைய போராயுதங்கள் மாம்ச பெலன் அல்ல. இப்படிப்பட்ட எண்ணங்கள் எழும்பும் போது, பெருமை, குடும்ப கௌரவம் போன்ற வற்றிற்கு நம்மை கீழ்ப்படியப் பண்ணாமல், நம்மை நாம் கிறிஸ்துவின் சிந்தைக்கு கீழ்படியச் செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தைகளையே எங்கள் அனுதின ஆகாரமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

**2 கொரிந்தியர் 10:4**

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

**ஜெபம்**: விடுதலை தரும் சர்வ வல்லமையுள்ள தேவனே, மாம்சத்தின் இச்சைகளை என் போராயுதமாக நான் கொண்டிராமல், உம்முடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நீதியின் வழியில் நடக்க கிருபை செய்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்

ஒரு கிராமத்திலே வசித்து வந்த மனிதனானவன், தன் வீட்டிற்கு பின் புறம் உள்ள தோட்டத்திலே சில காய்கறி நாற்றுக்களையும் மூலிகைச் செடிகளையும் நாட்டி, பராமரித்து வந்தான். நாற்றுக்கள் வளர்ந்து பலன் கொடுக்கும் நாட்களிலே, சில வனவிலங்குகள், அந்த தோட்டத்திற்கு வந்து அவைகளை சேதப்படுத்திச் சென்றன. அந்த விலங்குகளினால் விளைச்சலின் பலன் கெட்டுப் போகாதபடிக்கு, அங்கு வரும் விலங்குகளை தினமும் விரட்டுவதில் அநேக நேரத்தை செலவிட்டு, நாளடைவில், அந்த விலங்குகளின் தொல்லைகளால் இளைத்துப் போனான். அவனுடைய பாட்டனார், அவனை நோக்கி: தம்பி, உன் விளைச்சலின் பலனை பாதுகாக்க, தினமும் நீ எவ்வளவோ நேரத்தை விரயப்படுத்துகின்றாய். ஆனால் அப்படி செய்து வருவதினால் உன்னால் உன் விளைச்சல்களை, வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க முடியவில்லை. எனவே, தோட்டத்தை பாதுகாக்க வேண்டுமாயின் முதலாவதாக, வீட்டிற்கு பின்புறத்தை சுற்றி நீ வேலியை அடைக்க வேண்டும் என்று கூறினார். பிரியமானவர்களே, அந்த வனவிலங்குகளைப் போல நம்முடைய வாழ்வில் இருக்கும் மாம்ச இச்சைகளை மேற்கொள்வதற்கு, தேவ பிள்ளைகள், தங்கள் அறிவுக்கெட்டியபடி பல யுக்திகளை மேற்கொள்கின்றார்கள். தங்கள் பெலத்தின்படி பல கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். அவைகளால் சில நாட்கள் மட்டும் அல்லது மிஞ்சிப் போனால் சில கிழமைளுக்கு மட்டுமே, தங்கள் மாம்ச இச்சைகளை மேற்கொள்கின்றார்கள். ஆனால், நாளடைவிலே, தங்கள் முயற்ச்சிகளால் இளைத்துப் போய் விடுகின்றார்கள். மாம்ச இச்சைகளை நம்முடைய மாம்ச பெலத்தினால் மேற்கொள்ள முடியாது. முதலாவதாக, சத்திய வேதத்தை எங்கள் வாழ்க்கையைச் சுற்றி, வேலியாக போட்டுக் கொள்ள வேண்டும். அதாவது, வேதத்தை அதிகதிகமாக வாசித்து, தேவ வார்த்தைகளை தினமும் தியானம் செய்யும் போது, நம்மை மேற்கொள்ளப் பார்க்கும், மாம்ச இச்சைகள் பெலனற்றுப் போய்விடும். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, பெலவீனங்களை மேற்கொள்ளும்படி தினமும் வேதத்தை வாசித்து, தியானித்து, ஜெபியுங்கள். இதனால் உங்கள் உள்ளான மனிதன் கிறிஸ்துவுக்குள் பெலனடைவதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

**கலாத்தியர் 5:16**

**ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.**

**ஜெபம்:** விடுதலை தரும் தேவனே, மாம்ச இச்சைகள் என்னை மேற்கொள்ளாதபடிக்கு, உம்மிலும் உம்முடைய சத்துவத்தின் வல்லமையிலும் என்னைப் பலப்படுத்தி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அடிமைத்தன கட்டுகளில் அகப்பட்டுள்ளேன்...

போதகரே, நான் ஒரு பாவி. அசுத்த உதடுகளுள்ள மனுஷன். எப்படி நான் தேவனுடைய சமுகத்திற்கு செல்ல முடியும்? என் வாழ்க்கையானது மாறி, நான் பரிசுத்தமடைந்த பின்பு, நான் தேவ சமுகத்திற்கு சென்று ஜெபம் செய்வேன் என்று ஒரு மனிதனானவன் கூறிக் கொண்டான். போதகர் அந்த மனிதனை நோக்கி: மகனே, பல மனிதர்கள், இப்படி ப் பட்ட குற்ற உணர்வுகளோடு வாழ்ந்து வருகின்றார்கள். சில வேளைகளிலே தேவ பிள்ளைகள் கூட, தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பின்னடைவுகளால், எப்படி நான் தேவ சமுகத்திற்கு சென்று ஜெபிக்க முடியும் என்று ஜெபிப்பதை விட்டுவிடுகின்றார்கள். ஒரு சமயம், விபச்சாரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அன்றைய உலகின் சட்டப்படி இப்படிப்பட்ட பாவ வாழ்க்கை வாழும் ஸ்திரிகள் கல்லெறிந்து கொலை செய்யப்படுவார்கள். அவள் ஆண்டவராகிய இயேசுவின் சமுகத்திற்கு கொண்டுவரப்பட்டாள். அவருடைய சமுகத்திலே, பேசுவதற்கு அவளிடம் வார்த்தைகள் இல்லை. அவளை கொண்டு வந்தவர்கள் அவளைக் கல்லெறிந்து கொலை செய்யும்படி எத்தனித்துக் கொண்டிருந்தார்கள். அவமானமடைந்தவளாய், ஆண்டவர் இயேசுவின் சமுகத்தில் நின்ற அவளுக்கு அன்புள்ள ஆண்டவராகிய இயேசு, மனமிரங்கி, அவளை மன்னித்து, இனி பாவம் செய்யாதே என்று அனுப்பிவிட்டார். இன்று நீ உன் பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலையடைய விரும்பினால், அறையைப் பூட்டிக் கொண்டு, ஆண்டவராகிய இயேசுவை நோக்கிப் பார். பாவிகள் தங்கள் பாவத்தில் அழிந்து போவது அவருடைய சித்தமல்ல. சொல்ல முடியாத அடிமைத்தன கட்டுக்களிலிருந்து விடுதலையை கொடுக்க அவர் சித்தமுள்ளவராயிருக்கின்றார். இன்று அவருடைய சமுகத்திலே அமர்ந்திருந்து ஜெபம் செய்வாயாக அவரே நம்மை பாவங்களிலிருந்து சுத்திகரிக்க வல்லவராயிருக்கின்றார்.

**1 யோவான் 1:9**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**

**ஜெபம்**: மன்னிக்கும் தேவனே, என் வாழ்வில் ஏற்படும் பின்னடைவுகளால், நான் உம் சமுகத்தைவிட்டு ஓடிப் போகாதபடிக்கு, உம்மிடமே கிட்டிச் சேர எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பழைய வாழ்வுக்கு திரும்பாதேயுங்கள்

நான் யார் என்று உனக்கு தெரியும் தானே! என்னுடைய பழைய வாழ்க்கைக்கு திரும்பும்படி என்னைக் கோபமூட்டாதே, அந்தக் காலத்தில் இந்த ஊரே என் பெயரைக் கேட்டால் நடுநடுங்கும் என்று ஒரு மனிதனானவன் கூறிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, சில வேளைகளிலே, இப்படிப்பட்ட பேச்சுக்களை தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக் கொள்பவர்களும், அறிக்கையிடுவதை நாங்கள் அவ்வப்போது கேட்டிருக்கின்றோம். ஏன் தேவனை அறிந்தவர்கள் இப்படியாக தங்கள் பழைய பாவங்களையும், அக்கிரமங்களையும் பற்றி பெருமையாக பேசிக் கொள்கின்றார்கள்? ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தங்கள் கருத்துக்கு முரணாக பேசுகின்றவர்களை அடக்கும்படியாகவும் அல்லது தங்கள் குற்றங்களை சுட்டிக்காட்ட வரும் ஆலோசகர்களை விரட்டும்படியாகவும் தங்கள் பழைய துன்மார்க்கமான வாழ்க்கையைப் பற்றி பெருமிதமாக பேசிக் கொள்கின்றார்கள். இன்னுமாய், தங்கள் இளமைக் காலத்தில் தாங்கள் செய்த மாம்ச இச்சைகளை நிறைவேற்றும், பாவங்களைக் குறித்து வெட்கப்படுவதற்குப் பதிலாக, பழைய நண்பர்களோடு சேர்ந்து, அவர்களோடு அவர்களாக, தாங்கள் களைந்து போட்ட பழைய மனுஷனுடைய சுபாவங்களுக்கு உயிர் கொடுக்கும் வகையிலே, பாவ பழக்கங்களை மறுபடியும் அசை போடுகின்றார்கள். நாயானது தான் கக்கினதைத் தின்னும்படி திரும்புவதுபோல, மூடனும் தன் மூடத்தனத்துக்குத் திரும்புகிறான். (நீதி 26:11). நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்ற பிரகாரம் நாம் ஒருபோதும் நம்முடைய பழைய வாழ்க்கையை குறித்து மேன்மைபாராட்டக்கூடாது. (2 பேதுரு 2:22). கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு அவைகளால் ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் மிகவும் கேடுள்ள தாயிருக்கும். மோசம் போக்கும் பழைய மாம்ச கிரியைகளிலிருந்து நமக்கு விடுதலை தந்த ஆண்டவராகிய இயேசுவின் சிலுவையைக் குறித்து மட்டுமே நாம் மேன்மை பாராட்ட வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கின்றோமே.

**கலாத்தியர் 6:14**

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படி வேறு பிரித்த தேவனே, நான் விட்டு வந்த பழைய சுபாவத்திற்கு ஒருபோதும் திரும்பாதபடிக்கு, பரிசுத்த முள்ளவைகளை சிந்தித்துக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கேளுங்கள் தேடுங்கள் தட்டுங்கள்

"தன்னுடைய மகன் பல்கலைக்கழக பாடங்களிலே அதிவிசேஷட சித்தி பெறும்படிக்கு அவனுடைய தாயார் இரவு பகலாக தேவனை வேண்டிக் கொண்டாள்." "பிரபல்யமான ஸ்தாபனமொன்றிலே வேலை கிடைக்க வேண்டும் என்று ஒரு மனிதனானவன் ஊக்கமாக ஜெபித்து வந்தான்" இப்படியாக ஜெபித்தவர்கள், தாங்கள் எதிர்பார்த்ததிற்கும் அதிகமாக தேவன் கிருபை செய்தார் என்று சாட்சி கூறுவதை நாம் பல முறை கேட்டிருக்கின்றோம். இப்படியாக இன்று தேவ பிள்ளைகள் பல காரியங்களுக்காக உபவாசித்து ஜெபித்து வெற்றியை கண்டு கொள்கின்றார்கள். தேவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வது நல்லது. இவற்றுள் அதிகப்படியானவைகள், உணவு, உடை, உறைவிடம் மற்றும் இந்த உலக வாழ்க்கைக்குரிய காரியங்களாக இருக்கின்றது. அவற்றை நம் பரம பிதா நமக்கு தருகின்றவராக இருந்தால், நம்முடைய உள்ளான மனிதன் புதிதாக்கப்படும்படி, நம்மிடத்திலிருக்கும் பெலவீனங்களிலிருந்து நாம் விடுதலையடைய வேண்டும் என்று கேட்டால், அதைக் குறித்து நம்முடைய பிதாவாகிய தேவன் எவ்வளவாய் மகிழ்ச்சியடைவார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். எடுத்துக் காட்டாக, "பிதாவே, எனக்கு அடிக்கடி கோபம் வருகின்றது, என் உள்ளத்திலே எரிச்சல் இருக்கின்றது. இவைகளிலே இருந்து நான் விடுதலையடைய வேண்டும்" என்று தேவனிடத்தில் கேட்டால் அவைகளை அவர் நிச்சயமாக அருளிச் செய்வார். ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய காரியங்களை தேவ பிள்ளைகள், ஒரு தடவை அல்லது இரண்டு தடவை, தேவனிடம் வேண்டிக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட மறுரூபமடையச் செய்யும் ஜெபங்கள் ஒரு சில நிமிடங்களுக்குள் முடிவு பெற்றுவிடும். பிரியமானவர்களே, சோர்ந்து போகாமல், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று வேதம் நமக்கு அறிவுரை கூறுகின்றது. எனவே, அழிந்து போகின்றவைகளுக்காக அதிகமாக ஜெபிப்போமென்றால், அழியாமைக்குரிய பரலோக பொக்கிஷங்களுக்காக எவ்வளவு அதிகமாக நாம் ஜெபிக்க வேண்டும். கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் தேடுகிறவன் கண்டடைகிறான் தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். தம்மைநோக்கிக் கூப்பிடுகின்றவர்களுக்கு நன்மையான ஈவுகளை கொடுக்க, பரம பிதா சித்தமுள்ளவராக இருக்கின்றார்.

**லூக்கா 11:9**

**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

**ஜெபம்**: அழியாமையை தரித்துக் கொள்ளும்படி அழைத்த தேவனே, அழிந்து போகின்ற இந்த உலகத்தின் தேவைகளை குறித்து கவலையடையாமல், பரலோக நன்மைகளை நாடித் தேட கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன்னத அழைப்பைப் பெற்றவர்கள்

உணவுக் கழிவுப் பொருட்களை மட்டுமே உண்ணும் வன விலங்குகளின் இனங்களிலொன்று, இரவு நேரங்களிலே, ஒரு வீட்டின் முற்றத்திற்கு வந்து சென்றது. அந்தப் பகுதியிலே அநேக வீடுகள் இருந்த போதும், அவை குறிப்பாக ஒரு வீட்டின் முற்றத்திற்கு மட்டுமே போக்கும் வரத்து மாக இருந்தது. நாளடைவில், அந்த விலங்குகளில் ஒன்று, அந்த வீட்டில் தன் இருப்பிடத்தை ஏற்படுத்தும்படி வகை தேடியது. பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்ற வார்த்தையின்படி, அந்த வீட்டின் சொந்தக்காரன், தன் வீட்டு முற்றத்திலே அசுத்தங்களையும், கழிவுப்பொருட்களையும் விட்டு வைத்ததால், அதை நாடித் தேடும் வனவிலங்குகள் அங்கே வந்து சேர்ந்தன. ஒரு அழகான பூந்தோட்டமானது, தேனீக்களை கவர்ந்து கொள்ளும்; ஆனால் சாக்கடையான இடத் திலே அசுத்தத்தை விரும்பும் கொசுக்கள் வந்து சேரும். அது போலவே, நம்முடைய வாழ்க்கையிலே அசுத்தங்களையும், பாவ பழக்கங்களையும் கொண்டிருப்போமாகில், அவைகளிலே நாட்டமுள்ள மனிதர்கள் நம்மிடத்திற்கு போக்கும் வரத்துமாக இருப்பார்கள். ஒரு மனிதனானவன், குடித்து வெறிப்பதிலும் களியாட்டுக்களிலும் நாட்டமுள்ளவனாக, தன் வீட்டை ஒரு மதுபான சாலையைப் போல மாற்றினால், அதில் பிரியப்படுகின்றவர்களே அவன் வீட்டிற்கு அநேகமாக வந்து சேர்வார்கள். அது மட்டுமல்ல, தேவனுடைய ஆளுகைக்கு உட்படாத காரியங்கள் யாவும் பொல்லாங்கனாகிய பிசாசானவனுடைய ஆளுகைக்குள் இருக்கின்றது. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. பொல்லங்கன் கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறொன்றுக்கும் வரான். பொல்லாங்கனாகிய பிசாசானவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட காரியங்கள் இந்த உலகத்தால் அங்கீகாரம் பெற்றதும், மனிதர்களுக்கு தற்காலிகமான சந்தோஷத்தை தருவதைப்போல காட்சியளிக்கும்; அதன் முடிவோ அழிவாக இருக்கும். எனவே, உலக போக்கிற்கு இடங் கொடாமல், தேவனுடைய ஆளுகைக்கு உட்படாத அசுத்தமானவைகளை உங்கள் வாழ்க்கையைவிட்டு அகற்றி விடுங்கள். பொல்லாங்காய் தோன்றுகின்றவைகளை விட்டு விலகுங்கள். நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கின்றீர்கள். தேவன் உங்களுக்குள்ளே வாசம் பண்ணி உலாவுகின்றவராய் இருக்கிறார்.

**2 கொரிந்தியர் 6:16**

**தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, உன்னதமான அழைப்பை அற்பமாக எண்ணாமல், பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகி உமக்கு பிரியமுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வியாழன் \| பங்குனி 11 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 139:1 –7 |
|---|---|

# உள்ளத்தின் நினைவுகள்

அன்றைய நாட்களில் இருந்த யூத மார்க்கத்திலே, பரிசேயர் என்ற பிரத்தியேகமான குழுவை சேர்ந்த மனிதர்கள் இருந்தார்கள். இவர்கள் தங்கள் மதத்தையும், அதன் சடங்காச்சாரங்களையும் குறித்து மிகவும் வைராக்கியமுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ஜெபம் செய்யும்படி தேவாலயத்திற்கு போனான். பரிசேயனாகிய அவன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக் காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வார த்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என் சம்பாத்தியத்திலெல்லாம் தசம பாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். இந்தப் பரிசேயனின் பார்வையிலே பறிகாரர், அநியாயக்காரர், விபசார க்காரர் போன்றவர்கள் தேவனு டைய வழியைவிட்டு செல்லுக்கின் றவர்கள் என்று எண்ணிக் கொண் டான். அது உண்மை, அதாவது, தேவனாகிய கர்த்தர் அவைகளை வெறுக்கின்றார். ஆனால், இந்த பரி சேயனுடைய இருதயத்திலே பொல்லாங்கனாகிய பிசாசானவனுடைய குணாதிசயமாகிய "பெருமை" குடிகொண்டிருந்தது. இன்றைய நாட்களி லும், சில தேவனுடைய பிள்ளைகள், புகைத்து, மதுபான வெறி கொள் கின்றவர்களையும், போதைவஸ்துக்களுக்கு அடிமைப்பட்டவர்களையும், நெறிகெட்ட திரைப்படங்களால் தங்கள் மனதை கெடுத்துக் கொள்கின்ற வர்களையும், மோக பாவ இச்சைகளிலே வெளியரங்கமாக செயற்படுகி ன்றவர்களை மட்டுமே தேவனுக்கு பிரியமில்லாத வாழ்க்கை வாழ்கி ன்றார்கள் என எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால், இருதயத்திற்குள் மறைந்திருக்கும், பெருமை, குடும்ப அந்தஸ்து, சமுதாய பாகுபாடுகள், வன்மம், பகை, கசப்பு, எரிச்சல், பொறாமை போன்ற மாம்சத்தின் கிரி யைகள், தேவ பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்ட சிலரின் இருதயத் திலே குடிகொண்டிருக்க அவர்கள் இடங்கொடுப்பதால், தேவனை அறிந்திருந்தும், தெய்வீக சுபாவத்திற்கு அந்நியர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். நாமோ அப்படியிராமல், நம் உள்ளத்தை தேவனுக்கு கொடுப்போம்.

**எரேமியா 17:10**

**கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உள்ளத்தின் நினைவுகளும், நான் பேசும் வார்த்தைகளும் உமக்கு உகந்த திருப்பலியாக இருப்பதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிறிய தீமையான வித்துக்கள்?

"எல்லாம் மட்டாக இருக்கட்டும்" என்று பொருட்படும்படி ஆங்கில த்திலே ஒரு வசனத்தை கூறிக் கொள்வார்கள். அதாவது, உன் ஆகாரத் திலே உப்பும், சீனியும், எண்ணெயும் மட்டாக இருக்கட்டும். மனிதனு டைய வாழ்க்கைக்கு நித்திரை அவசியம், ஆனால் இன்னும் அதிகமாக நித்திரை கொள்வேன் என்று வாழும் மனிதன் சோம்பேறியாக மாறிவிடுகின்றான். தேனைக் கண்டு மட்டாய்ச் சாப்பிடு மிதமிஞ்சிச் சாப் பிட்டால் வாந்திபண்ணுவாய் (நீதி 25:16). அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு (பிரசங்கி 12:12). சொற் களின் மிகுதியில் பாவமில்லா மற் போகாது. தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் (நீதி 10:19). குடியனும் போஜனப்பிரிய னும் தரித்திரராவார்கள். (நீதி 23:21). இப்படியாக மனிதன் தன்னுடைய வாழ்க்கையிலே, பல விஷயங்களிலே மட்டாக இருப்பது அவனுக்கு நல்லது. ஆனால் இன்று சிலர் பாவமான காரியங்களை அல்லது பாவத்திற்கு வழி வகுக்கும் காரியங்களையும் மட்டாக செய்து கொண் டால் தவறில்லை என்று ஆலோசனை கூறுகின்றார்கள். அதாவது, பண ஆசை, மதுபான வெறி கொள்ளுதல், நெறிகெட்ட திரைப்படங்களை பார்த்தல், புகைத்தல் போன்றவை மட்டாக இருந்தால் தவறில்லை என்று இவைகளை பாராமுகமாக விட்டுவிடுகின்றார்கள். அது மட்டும ல்லாமல், இப்படிப்பட்ட மாம்ச இச்சைகளை நியாயப்படுத்தும்படிக்கு வேத வசனங்களை புரட்டுகின்றார்கள். ஒரு தகப்பனானவன், தன் மகனை நோக்கி: அந்த மலைப்பாம்பு மிகவும் சிறியதாக இருக்கின்றது. எனவே அதை நீ கூட்டுக்குள் அடைத்து வைத்திரு என்று கூற முடியுமா? குறித்த காலத்திலே, அந்த பாம்பு வளர்ந்து தன்னுடைய சுபாவத்தை வெளிக்காட்டும். கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவ தையும் உப்பப்பண்ணும். பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத இரத்தத்தினாலே மீட்கப்பட்டு, உன்னதமான அழைப்பை பெற்றிருக்கின்றீர்கள். எனவே உங்கள் இருத யங்களிலே பொல்லாங்கன் சிறிய விதைகளை விதைப்பதற்கு இடங் கொடாதிருங்கள். அவை மட்டாக, மிதமாக ஆரம்பித்து, காலப்போக் கில் உங்கள் பரிசுத்த வாழ்வைக் குறித்த உணர்வை உங்களை விட்டு முற்றாக அகற்றிவிடும். எனவே இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ளுங்கள்.

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

**ஜெபம்**: பாவ சாபத்திலிருந்து விடுதலை தந்த தேவனே, நான் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாதபடிக்கு, எல்லா காரியங்களிலும் எச்சரிக்கையுள்ளவனா(ளா)க வாழ வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்

இன்று மகனுடைய சம்பள நாள், வீட்டு வாடகையை இன்று மாலை செலுத்தி விடுகின்றேன் என்று ஒரு தாயானவள் வீட்டு சொந்தக் கார ரிடம் கூறினாள். மாலையிலே, வீடு திரும்பிய மகன், குறித்த சம்பளக் காசைவிட மிக அதிகமான தொகையை தன் தகப்பனானவரிடம் கொடு த்தான். தகப்பனானவர் அவனை நோக்கி: இவ்வளவு பணம் உனக்கு எப்படி கிடைத்தது என்று ஆச்சரியத் தோடு கேட்டார். அதற்கு மகனான வன்: இல்லை அப்பா, இன்று முக்கிய மான கிரிகெட் போட்டி நடைபெற் றது. அதற்கு நான் இன்ரநெற் வழி யாக பந்தயம் கட்டியிருந்தேன். நான் பந்தயம் கட்டிய அணி ஜெயித்ததால் எனக்கு இரண்டு மடங்கு பணம் கிடைத்தது என்று கூறினான். உன்னுடைய அணி தோல்வியடைந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என தாயானவள் மகனிடம் கேட்டாள். ஏன் அப்பா, நடக்காத ஒன்றைக் குறித்து அலட்டிக் கொள்கின்றீர்கள். நான்தான் ஜெயித்துவிட்டேனே என் றான். தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, வீட்டு வாடகை கட்ட வேண்டும், என்னுடைய மருத்துவ செலவு செலுத்த வேண்டும், உன் தங்கச்சிக்கு கல்லூரி பணம் கட்ட வேண்டும், நாங்கள் நாளாந்தம் உண்ண வேண்டும் என்றும் நாங்கள் உன்னை நம்பியிருக்கின்றோம் என்று நீ அறிந்தும், உன் சம்பளத்தை சூதாட்டத்திலே போடுவதற்கு எப் படி உனக்கு மனம் வந்தது? நீ எங்கள் வாழ்க்கையை சூதாட்டத்திலே பந்தயப் பொருளாக வைத்தாயே, எங்கள் வாழ்க்கை உனக்கு அவ்வ ளவு அற்பமாக தோன்றியதா என்று கேட்டார். ஆம் பிரியமானவர்களே, அந்த மகனானவன் செய்தது போல, இன்று சில தேவ பிள்ளைகளும், தங்கள் ஆன்மீக இரட்சிப்பையும் அற்பமாக எண்ணுகின்றார்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் எவ்வேளையிலும் விழிப்புள்ளவர் களாகவும் இருப்பதற்கு பதிலாக பாவத்திற்கு வழி வகுக்கும் பழக்க ங்களை மட்டாக செய்வோம் என்று துணிகரம் கொண்டு, பொல்லாங் கனின் கண்ணிக்குள் தங்களை அகப்படுத்திக் கொள்ளக்கூடிய அபாய த்திற்குள் தங்களை அர்ப்பணிக்கின்றார்கள். இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். சகோதரரே, கர்த்தருடைய நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகார கிரியைகளுக்கு செல்லும் வழியிலிருந்து உங்களை விலக்கி, தெளிந்த புத்தியுள்ளவர்களாக ஞானமாய் நடந்து கொள்ளுங்கள்.

**1 பேதுரு 5:8**

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்;

**ஜெபம்**: இரட்சிப்படைவதற்கென்று எங்களை அழைத்த தேவனே, நீர் தந்த கிருபையின் நாட்களை அற்பமாக எண்ணி, எங்கள் ஆத்துமாவை கெடுத் துக் கொள்ளாதபடிக்கு எங்களை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | பங்குனி 14 | 📖மாலை வாசகம் – 2 தீமோ 4:7–8

# நியமித்த ஒழுங்கின்படி...

ஒரு ஊரிலிருந்த வாலிபன், தேசிய மட்டத்திலே நடத்தப்படும், விளையாட்டுப் போட்டிகளிலே, ஓட்டப் பந்தயப் போட்டியிலே கலந்து கொண்டான். ஓட்டப் பந்தயப் போட்டி ஆரம்பமானதும், அந்த வாலிபன் தனக்கென்று குறிக்கப்பட்ட ஓடு தளத்திலே (Lane) அவன் ஓடிக் கொண் டிருக்கையில், அவன் அருகில் ஓடிய பக்கத்து கிராமத்தை சேர்ந்த இளைஞன் ஒருவன், தனக்கென்று குறிக்கப்பட்ட தளத்தில் ஓடாது, ஓட்டப்போட்டி ஒழுங்குக்கு விரோத மாக ஓடுவதை கண்டு கொண்டான். அதனால் அந்த வாலிபன் தன் ஓட்ட த்தை நிறுத்திவிடவில்லை. அவன் விளையாட்டுப் போட்டியின் ஒழுங்கு முறைப்படி தன் ஓட்டப் பந்தயதளத் தில் ஓடினான். பக்கத்து கிராமத்து இளைஞன் முதலாவதாகவும், இந்த வாலிபன் இரண்டாவதாகவும் ஓட்டப் பந்தயப் போட்டியை ஓடி முடித் தார்கள். விளையாட்டுப் போட்டியை பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள், முதலாம் இடத்தை தட்டிக் கொண்ட பக்கத்து கிராமத்து இளைஞனை பலத்த கரகோஷத்துடன் வாழ்த்தினார்கள். அந்த இளைஞனுடைய கொண்டாட்டம் இரண்டு நிமிடங்களுக்கு மட்டுமே நீடித்தது. இரண்டு நிமிடங்களுக்கு பின், ஓட்டப் பந்தயப் போட்டியின் நடுவர்கள், அந்த இளைஞன் தன் தளத்தைவிட்டு தவறி, பிறிதொரு தளத்தில் ஓடியதால், ஓட்டப் போட்டியிலிருந்து நீக்கப்பட்டான் என்றும், இரண்டாவதாக ஓடி முடித்த வாலிபன், முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டான் என்றும் அறிவித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, நாமும் நம்முடைய ஆவிக் குரிய ஓட்டத்திலே, பரலோக பந்தயப் பொருளை நோக்கி ஓடிக் கொண் டிருக்கின்றோம். இன்னும் அநேகர் தாங்களும் அதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் யார் பரிசுப் பொருளை பெற்றுக் கொள்வார்கள்? மற்றய மனிதர்களா அல்லது நாங்களா? யார் நியமித்த ஓட்டத்தில் தேவ ஒழுங்கின்படி ஓடுகின்றார்க ளோ அவர்களே பரிசுப் பொருளை பெற்றுக் கொள்வார்கள். மற்றய மனிதர்கள் அப்படிச் செய்கின்றார்கள், அந்த ஊழியர் இப்படிச் செய்கின்றார் எனவே நானும் அப்படியும் இப்படியும் செய்தால் என்ன? என்று மற்றவர்களுடைய ஓட்டத்தை பார்த்து, நீங்கள் பின்வாங்கிப் போகாதபடிக்கு, நீதியின் கிரீடத்தை பெற்றுக் கொள்ளும்படி நியமித்த ஒழுங்கின்படி பொறுமையோடு ஓடுங்கள். விசுவாத்திலே நிலைத்திரு ங்கள். நீதியுள்ள நடுவராகிய கர்த்தர் அவர் வரும் நாளிலே, அவர் நிய மித்த ஒழுங்கின்படி ஓடிய யாவருக்கும், நீதியின் கிரீடத்தை தந்தருள்வார்.

**1 கொரிந்தியர் 9:24**

**நீங்கள் பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓடுங்கள்.**

**ஜெபம்:** நீதியின் தேவனே, நான் அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு ஓடிக்கொண்டிருகின்றேன் என்பதை உணர்ந்து, எல்லாவற்றிலும் இச்சை யடக்கத்தோடு இருக்கும்படிக்கு என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சகோதரர்கள் பின்வாங்கிப் போகும்போது

ஒரு சமயம், இரட்சகராகிய இயேசு கப்பர்நகூம் என்னும் ஊரில் பிரவேசித்தபோது, ரோம பட்டாளத்திலே நூறு படைவீரர்களுக்கு அதிபதியாக (நூற்றுக்கு அதிபதி) இருந்த ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு நான் ஒருவனைப் போ வென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய் என்றால் செய்கிறான் என்றான். இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின் செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பாருங்கள், சரீர வியாதியினால் வாடும் தன் வேலைக்காரனை குறித்து அந்த அதிபதி எவ்வளவாக கரிசனையுள்ளவனாக இருந்தான். தன் வேலைக்காரன், வேதனையோடு மரிப்பதை அவன் விரும்பவில்லை. ஆண்டவர் இயேசுவின் போர்வீரர்களாகிய நாம், பரலோகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றோம். நம்மில் ஒருவன் பாவம் செய்து, ஆன்மீக நோய் கொண்டு, மரித்துப் போனால் அவன் முடிவு எவ்வளவு பரிதாபமாக இருக்கும்? எனவே, அந்த நூற்றுக்கு அதிபதி, ஆண்டவர் இயேசுவிடம் பரிந்து பேசியதைப் போல, நாமும் குற்றத்தில் அகப்பட்டு, மனவேதனைப்படும் சக போர்வீரர்களுக்காக, ஆண்டவர் இயேசுவிடம் பரிந்து பேச வேண்டும். நாம் மற்றவர்களை நியாந்தீர்க்காமல், உண்மையான உள்ளத்தோடு விசுவாசமுள்ளவர்களாய் ஆண்டவர் இயேசுவிடம் கேட்டால், அவர் நம்முடைய ஜெபத்திற்கு பதிலளிக்க உண்மையுள்ளவராக இருக்கின்றார். காலத்திற்கு முன் ஒருவரையும் நியாயந்தீர்க்காமல், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

**மத்தேயு 8:16**

**ஆண்டவரே!என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடியவேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக் கொண்டான்.**

**ஜெபம்:** அன்புள்ள பரலோக தந்தையே, பாவம் செய்து பின்வாங்கி இருக்கும் சகோதரர்கள் உம்மைவிட்டு தூரம் சென்று, தங்கள் ஆத்துமாவை கெடுத்துக் கொள்ளாதபடிக்கு அவர்களை காத்துக் கொள்ளும்.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | பங்குனி 16

📖 மாலை வாசகம் – எபிரெயர் 8:5

# கர்த்தர் நியமித்த ஒழுங்கின்படி...

இன்றைய நாளிலே, முன்னோடிகளாக திகழ்ந்த இரண்டு மனிதர்களின் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார்ப்போம். முதலாவதாக, மோசே என்னும் மனிதன், பண்டைய எகிப்து என்னும் தேசத்திலே அரண்மனையிலே வளர்ந்து வந்தார். அன்றைய எகிப்து, இன்றைய நாட்களில் வல்லரசுக்களாகத் திகழும் தேசங்களுக்கு ஒப்பாக இருந்தது. அப்படிப்பட்ட தேசத்திலே, மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவராக இருந்தார். இரண்டவதாக, பவுல் என்னும் மனிதன் பண்டைய ரோம ராஜ்யத்தின் குடியுரிமையுடையவராக இருந்தார். இவர் வேத பிரமாணங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்தவர். அன்று யூதர்கள் மத்தியிலே இருந்த பிரபல்யாமான பரிசேயர் என்னும் குழுவை சார்ந்தவர். இவர்கள் இருவரும், உலக முறைப்படி கற்றுத் தேர்ந்தவர்களும். சமூக அந்தஸ்து உடையவர்களாகவும், அவர்கள் வாழ்ந்த கால எல்லையிலே மனிதர்கள் மத்தியிலே அங்கீகாரம் பெற்றவர்களுமாக இருந்தார்கள். இவர்கள் இருவரும் கர்த்தருடைய சித்தம் இந்த பூமியிலே நிறைவேறும்படிக்கு அதிகமாக கர்த்தரால் பயன்படுத்தப்பட்டவர்கள். அந்த பயன்பாடானது, அவர்களின் கல்வியறிவாலோ வேத அறிவாலோ, சமூக அந்தஸ்தாலோ அல்லது மனித அங்கீகாரத்தினாலோ ஏற்படவில்லை. மாறாக, கர்த்தர் இவர்களை அழைத்த போது, கர்த்தருடைய சித்தப்படி, கர்த்தர் நியமித்த ஒழுங்கின்டி, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, கர்த்தர் கூறுவதை மட்டும் செய்து முடிக்கும்படி தங்களை முற்றாக அர்ப்பணித்தார்கள். இந்த உலகத்தினால் தங்களுக்கு உண்டான மேன்மைகளை, நஷ்டமும் குப்பையுமென தள்ளிவிட்டார்கள். பிரியமானவர்களே, கர்த்தர் நம்மையும் அழைத்திருக்கின்றார். ஆனால் சில மனிதர்கள், அழைப்பை பெற்ற பின்பு, தாங்கள் நினைத்த பிரகாரமாக, தங்கள் இஷ்டப்படி, தங்கள் உலக கல்வி, சமூக அந்தஸ்தின்படி, தேவ சித்தத்தை நிறைவேற்ற முற்படுகின்றார்கள். நாங்கள் கல்வி கற்பதும், பிரயாசப்படுவதும், வேத பிரமாணங்களை முறைப்படி அறிந்து கொள்வதும் நல்லது, ஆனால் கர்த்தருடைய சித்தம், நம்முடைய வாழ்க்கையிலே, கர்த்தர் நியமித்த ஒழுங்கின்டி, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, கர்த்தர் கூறுகின்ற பிரகாரம் நிறைவேறும்படிக்கு நாம் நம்மை முற்றாக அர்ப்பணிக்க வேண்டும்.

**பிலிப்பியர் 3:11**

**அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்.**

**ஜெபம்**: அழைத்த தேவனே, முன்னோடிகளாக திகழ்ந்த பரிசுத்தவான்களைப் போல, நானும் உம்முடைய பூரண சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுத்து வாழ பிரசாமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திடமனதாயிருங்கள்

*கர்த்தர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர். ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர் இருளில் இருக்கிறதை அவர் அறிவார் வெளிச்சம் அவரிடத்தில் தங்கும் (தானியேல் 2:21-22). அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார் அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள் அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார் (1 சாமுவேல் 2:8). கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார் (சங்கீதம் 18:2). ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 10:29 - 31). பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. (சங்கீதம் 24:1). கர்த்தர் ராஜரிகம் செய்கின்றார் (சங்கீதம் 97:1) கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார் சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம் பண்ணுகிறார். அல்லேலூயா (சங்கீதம் 146:10). பிரியமானவர்களே, இவரே நம்முடைய கர்த்தர். நம்மை தாயின் கருவினிலே தெரிந்து கொண்டவர். என்றென்றும் மாறாதவராயிருக்கின்றார். எனவே, மாறிப் போகும் இந்த உலகிலே, உங்களைச் சூழ உள்ள மனிதர்களின் போக்குகளையும், உங்களை நோக்கி வரும் சவால்களையும் கண்டு மருண்டு போய்விடாதிருங்கள். கர்த்தர் ஒருபோதும் தம்முடையவர்களை கைவிடார். எனவே நீங்கள் அவரைவிட்டு விலகாமலும், கர்த்தர் மேல் கொண்டுள்ள விசுவாசத்திற்கு எதிரான வார்த்தைகளை அறிக்கையிடாம லும், கர்த்தரில் உறுதியாய் தரித்திருங்கள்.*

**சங்கீதம் 27:14**

**கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.**

**ஜெபம்:** ஒரு போதும் என்னை மறவாத தேவனே, என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், நீர் என்னை சேர்த்துக் கொள்வீர் என்ற உண்மையை உணர்ந்து உம்மை பற்றிக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கரம் பிடித்து நடத்துகின்ற தேவன்

ஒரு மனிதனானவன் தான் செய்யும் வேலையை மிகவும் கருத்துடன் பல வருடங்களாக செய்து வந்தான். பல தடவைகள், சக ஊழியர்களிட மிருந்தும், மேற்பார்வையாளரிடமிருந்தும் பாராட்டுகளை பெற்றிருந்தான். அண்மையில், காரியாலயத்திலே இணைந்து கொண்ட சிலர், அந்த நேர் மையான மனிதன்மேல் கண்வைத்து, அவனுக்கு எதிராக அநீதியான காரியங்களை செய்து வந்தார்கள். சில மாதங்களுக்கு பின், அந்த மனி தனானவன் அந்த ஸ்தாபனத்தை விட்டு விலகி, இன்னுமொரு இடத்திற்கு வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந் தத்திற்கு உள்ளானான். அவன் மன திலே, உண்மையாய் வேலை செய்த எனக்கு ஏன் இப்படியான அநீதியான செயல்கள் நடக்க வேண்டும்? என்னை நன்றாக அறிந்த இயக்குனர்கள்கூட எனக்காக பேசவில்லையே என்று மன வேதனைப் பட்டான். சுமார் இரண்டு வருடங்களுக்கு பின், தேசத்திலே ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால், அவன் முன்பு வேலை பார்த்த அந்த ஸ்தாபனம், மிகவும் பாதிக்கப்பட்டது. அந்தக் ஸ்தாபனத்தின் உரி மையாளர்கள், அந்த தேசத்தில் இயங்கி வந்த தங்கள் வியாபார ஸ்தா பனங்கள் யாவையும் மூடிவிட்டு, அவற்றை இன்னுமொரு தேசத்திற்கு கொண்டு போவதற்கு முடிவெடுத்ததால், அந்த ஸ்தாபனத்தில் இருந்த யாவரும் வேலையை இழந்து போனார்கள். ஆனால், அந்த மனித னானவன் தற்போது வேலை செய்யும் காரியாலயத்திலே பிரச்சனைகள் ஏதுமின்றி வேலை செய்து வந்தான். அந்த மனிதனானவன் மூன்று காரி யங்களை உணர்ந்து கொண்டான்: முதலாவதாக, முன்பு வேலை செய்த இடத்திலே, தான் தேவனுடைய முகத்தை நோக்கிப் பார்ப்பதற்கு பதி லாக, தனக்கு ஆதரவாக இருந்த அதிகாரிகளின் முகத்தை நோக்கிப் பார்த்தேன் என்றும், இரண்டாவதாக, தான் எப்போதும் தேவனிலே நிலைத்திருக்க வேண்டும் என்பதையே தேவன் விரும்புகின்றார் என் றும், மூன்றாவதாக, கரம் பிடித்து நடத்தும் கர்த்தர் என்னோடு இருக் கின்றார் என்றும் தன்னையும் தன் குடும்பத்தையும் ஏற்பட்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து காக்கும் பொருட்டு, என் பழைய வேலை இடத்திலே எனக்கேற்பட்ட தீமையை, தேவன் நன்மையாக மாற்றினார் என்றும் அவன் உணர்ந்து கொண்டான். பிரியமானவர்களே, நாம் தேவனை சார்ந்து வாழும் போது, எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் நம்மை வலக்கரம் பிடித்து நடத்தகின்றவராயிருக்கிறார்.

**சங்கீதம் 73:23**

**ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன் என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர் என்ற சத்தியத்தை உணர்ந்து வாழும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வைராக்கியம் பாராட்டுதல்

என்னை அவமதித்த அந்த வீட்டின் வாசற்படியை நான் மிதிக்க மாட்டேன் என்று சபதம் கூறிய ஒருவன், தன் தீர்மானத்திலே மிகவும் வைராக்கியமாக இருந்து வந்தான். இவ்வண்ணமாகவே ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்திலே தான் நினைத்ததை சாதித்து முடிப் பேன் என்று, நினைத்ததை சாதிக்கும் வரைக்கும் வைராக்கியம் பாராட்டுகின்றார்கள். சிலர் தங்கள் இருதயத்திலே கொண்டுள்ள பகை, வன்மம், கசப்பு போன்ற சுபாவங்களைக் குறித்து வைராக்கியம் பாராட்டு கின்றார்கள். இன்னும் சிலர், தங்கள் சமூக அந்தஸ்தைக் குறித்து வைராக்கியம் பாராட்டி, பல மனிதர்களை ஒடுக்கியாமுகின்றார்கள். சவுல் என்னும் மனிதன் (பின்பு பவுல் என்று அழைக்கப்பட்டவர்), தன்னுடைய மதத்தைக் குறித்து மிகவும் வைராக்கியமுள்ளவராக இருந்தார். இவர் ஒரு சன்மார்க்கராக இருந்த போதிலும், தன்னுடைய மதத்தை காக்கும் பொருட்டு, கிறிஸ்தவர்களை துன்புறுத்தி வந்தார். அவர் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தார். ஒரு நாள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவரை சந்தித்தார். அந்நாளிலே அவருடைய வாழ்க்கை முற்றாக மாற்றப்பட்டது. தனக்கிருந்த உலக மேன்மையை குறித்த வைராக்கியத்தை தள்ளிவிட்டு, தன்னைக் குறித்ததான பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ப திலே அவர் வைராக்கியமாக இருந்தார். மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று கிறிஸ்துவின் அன்பைக் குறித்து வைராக்கிமுள்ளவராக இருந்தார். பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் ஏதோ ஒரு காரியத்திலே, நான் நினைத்ததை செய்து முடிப்பேன் என்ற வைராக்கியமுள்ளவர்களாக இருந்த சமயங்கள் இருக்கும். மாம்ச இச்சைகளோ ஒழிந்து போகும் எனவே அவைகளைக் குறித்து வைராக்கியம் பாராட்டாமல், அந்த வைராக்கியத்தை, உங்கள் வாழ்க்கையில் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு பயன்படுத்துங்கள்.

**கலாத்தியர் 4:18**

நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்,

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பரம தந்தையே, பரலோகத்திற்குரிய பொக்கிஷங்களை பெற்றுக் கொள்ளும்படிக்கு, அதிலே வைராக்கிய வாஞ்சையாக இருக்கும்படிக்கு, அதன் மேன்மையை உணரச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| சனி \| பங்குனி 20 | 📖 மாலை வாசகம் – தானியேல் 3:12 – 18 |
|---|---|

# நம்பிக்கையை அறிக்கையிடுங்கள்

ஒரு சமயம், பாபிலோன் ராஜ்யத்தை ஆட்சிசெய்த பராக்கிரமமுள்ள நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா அறுபதுமுழ உயரமும் ஆறுமுழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, தேசத்தின் அதிகாரிகளையும், சகல ஜனங்களையும் ஜாதிகளையும் பாஷைக்காரருமானவர்களையும் அழைப்பித்து, தான் செய்து நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளும்படியும், எவனாகிலும் தாழவிழுந்து, அதைப் பணிந்து கொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படும் படியும் அவனாலே கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் ராஜாவிற்கு பணிவிடை செய்யும்படி, யூதா தேசத்திலே இருந்து, சிறைப்பிடிக்கப்பட்டு வந்த தேவ பிள்ளைகளாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பர்கள் அந்த சிலையை வணங்குவதற்கு மறுத்தார்கள். ஏனெனில் அவர்கள் தேவனாகிய கர்த்தரை மட்டுமே பணிந்து கொள்ளுகின்றவர்கள். ராஜா அவர்கள் மேல் உக்கிரகோபங்கொண்டு அவர்களை அழைப்பித்தான். அவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள். பிரியமானவர்களே, சிறைக் கைதிகளாக கொண்டு வரப்பட்ட அந்த தேவபிள்ளைகளின் வைராக்கிய வாஞ்சையைப் பாருங்கள். பராகிரமமுள்ள ராஜாவின் முன்னிலையிலும் அவர்கள் தங்கள் நம்பிக்கையை சமரசம் செய்து கொள்வதற்கு இணங்கவில்லை. மரணமிரட்லுக்கும் பயப்படவில்லை. இன்று நீங்கள் வேலை செய்யும் இடங்களிலும், கல்வி கற்கும் இடங்களிலும், வெளியிடங்களிலும் உள்ள அதிகாரிகள் முன்னிலையிலும் உங்கள் நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருங்கள். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய வேதத்திற்கு முரணான செயல்களைச் செய்வதற்கு சற்றும் இடங் கொடுக்காதிருங்கள்.

**எபிரெயர் 10:23**

அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்;

**ஜெபம்:** வழிநடத்தும் தேவனே, இவர்கள் கேட்பது இது சின்னக் காரியம் தானே, யாரும் கண்டு கொள்ளமாட்டார்கள் என்று உம்முடைய வார்த்தைக்கு விரோதமாக பாவம் செய்யாதபடி என்னைக் காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | பங்குனி 21

📖 மாலை வாசகம் – மத்தேயு 6:33

# உங்கள் இருதயமும் எங்கே இருக்கின்றது?

எங்களுடைய பிள்ளைகள், நன்றாக படிக்க வேண்டும், நல்ல உத்தி யோகத்தை செய்ய வேண்டும், நேர்மையாக உழைக்க வேண்டும், ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்னும் விருப்பம் பொதுவாக எல்லா பெற்றோரிடமும் உண்டு. இதிலே என்ன தவறு உண்டு? இது ஒரு நல்ல எண்ணம். இப்படியாக ஒரு பெற்றோர், தங்கள் பையனை, நல்ல பாடசாலை ஒன்றிலே சேர்த்து விட்டார்கள். அவனும் நன்றாக படித்து வந்தான். ஐந்தாம் ஆண்டிலே, கணித பாடம் அவனுக்கு கஷ்டமாக இருந்தது. ஊரிலே இருக்கும் நல்ல கணித ஆசிரியர் ஞாயிறு காலையிலே கணித பாடத்தை சொல்லிக் கொடுத்தார். அவரிடம் உதவி பெறும்படிக்கு, தங்கள் மகனை அங்கே அனுப்ப முடிவெடுத்தார்கள். நாங்கள் காலையிலே ஆலயத்திற்கு செல்லாமல் இனி மாலையிலே செல்லலாம் என கூறிக் கொண்டார்கள். ஆறாம் ஆண்டிலே, ஒரு சனிக்கிழமையன்று, அவனுக்கு கால் பந்தாட்ட போட்டியிருந்ததால், அன்று சனிக்கிழமை உபவாச ஜெபத்தை விட்டுவிட்டு அவனுடைய கால்பந்தாட்ட போட்டியை பார்க்கச் சென்றார்கள். ஒரு நாள் அவன் பெற்றோரை நோக்கி: திங்கள் காலையிலே தவணைப் பரீட்சை ஆரம்பமாகின்றது, நான் படிக்க வேண்டும் என்றான். பெற்றோர் அவனை நோக்கி: ஞாயிறு மாலை நீ ஆலயத்திற்கு செல்லத் தேவையில்லை, ஒரு ஞாயிறு தவறினால் குற்றமில்லை, நீ வீட்டிலிருந்து படித்துக் கொள் என்று கூறினார்கள். இப்படியாகவே, இந்த உலகத்திலே தாங்கள் உயிர் வாழும்படிக்கும் சரீரத்துக்கு வேண்டிய தேவைகளை சந்திக்கும்படிக்கு, தங்கள் மகனானவனுடைய ஆன்மீக வாழ்வை ஊன்றக் கட்டும் காரியங்களை இரண்டாவது இடத்திற்கு தள்ளிவிட்டார்கள். சின்ன வயதிலிருந்து, அந்த மகனானவன் எதைக் கற்றுக் கொண்டான்? தான் படிப்பதற்கு, தேவ காரியங்கள் கூட தடையாக வரக்கூடாது; நான் விளையாடும் விளையாட்டுக்கள் தேவ காரியங்களைவிட முக்கியமானது என்று அவன் தன் சிறுவயதிலிருந்தே படிப்படியாக கற்றுக் கொண்டால், அவன் வளர்ந்து தன் வாழ்வில் எதை முக்கியப்படுத்துவான்? பிரியமானவர்களே, மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். எனவே பரலோக பொக்கிஷத்தை சேர்த்து வைக்கும்படிக்கு அழியாமைக்குரியவைகளை விதையுங்கள். அவற்றை உங்கள் பிள்ளைகளுக்கும் அவர்களுடைய சிறு வயதிலிருந்தே கற்றுக் கொடுங்கள்.

**மத்தேயு 6:21**

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, என் வாழ்வில் நான் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்படிக்கு என் வாழ்வின் வழிகளை நீர் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சாட்சியாக எழுந்து நில்லுங்கள்

பிரபல்யமான ஒரு கம்பனி ஒன்றிலே, வேலை செய்து வந்த ஒரு தேவ பக்தியுள்ள மனிதனானவன் அண்மையிலே தனக்கு கிடைத்த பதவி யுயர்வை குறித்து சபை ஐக்கியத்திலே சாட்சி பகர்ந்தான். அந்த கம்ப னியின் உரிமையாளர், ஆண்டவர் இயேசுவை அறியாத மனிதனாக இருந்தான். அந்த உரிமையாளர், வருடாந்தம் செய்து வந்தது போல, இந்த வருடமும், தன்னுடைய மதச் சடங்கு ஒன்றை கம்பனி முழுதும் கொண்டாடும்படிக்கும், அதை ஒருங்க மைப்பதன் பொறுப்பை புதிதாக இய க்குனராக பதவியேற்ற அந்த மனி தனிடம் கொடுத்திருந்தார். அந்த மனித னானவனின் மனதிலே பெரும் குழ ப்பம் ஏற்பட்டு விட்டது. அவனுடைய நண்பர்களில் சிலர், நீ அந்த விழாவை ஒழுங்கமைத்து கொடு,ஆனால் அதிலே பங்கேற்காதே, ஏன் நீ வீணாக இந்த வேலையை இழந்து போக வேண்டும் என்று கூறினார்கள். வேறு சிலர், நீ அன்றைய தினமன்று வியாதிபட்டிருக்கின்றேன் என்று வீட்டில் நின்று விடு என்றார்கள். இராத்திரியிலே அவன் படுத்திருக்கும் போது, திடீரென தேவனுடைய தாசனாகிய தானியேலைப் பற்றிய ஞாபகம் அவனுக்கு வந்தது. பாபிலோனிய ராஜ்யத்திலே பெரும் பதவியிலே இருந்த அவன் தான் நம்பியிருக்கும் தேவனை தொழுது கொள்ள வேண்டாம் என்றும், அப்படி தொழுது கொள்பவர்கள் சிங்கத்தின் கெபிக்குள் போடப்படுவார்கள் என்றும் அறிந்திருந்தும், தன் தேவனை தொழுது கொள்வதை அவன் நிறுத்தவில்லை. தனக்கு கிடைத்திருக்கும் பதவியையும், தன் உயிருக்கு வரக்கூடிய ஆபத்தையும் அறிந்திருந்தும் அவன் வழமையாக செய்வது போல, தேவனாகிய கர்த்தரையே தொழுது கொண்டான். தானியேல், ஆத்துமாவைக் கொல்ல வல்லவர் களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு அவன் பயப் படவில்லை. ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்ல வரை பயபக்தியுடன் சேவித்து வந்தான். இந்த வார்த்தைகளால் மிகவும் திடன் கொண்ட அந்த மனிதனானவன், தான் தேவன் மேல் கொண்ட விசுவாசத்தை கிரியையிலே காண்பிக்க வேண்டிய நேரம் இதுவே என அடுத்த நாள் காலையிலே, நேரடியாக உரிமையாளரின் காரியாலத்தி ற்கு சென்று, சற்றும் தயங்காமல், தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை யிட்டான். தன் விசுவாசத்திற்கு விரோதமான காரியங்களில் தான் சற்றும் பங்கேற்க மாட்டேன் என்று தயவாக அவரிடம் கூறினான்.

**மத்தேயு 10:28**

**ஆத்துமாவையும் சரீரத் தையும் நரகத்திலே அழி க்க வல்லவருக்கே பயப் படுங்கள்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, மனிதர்களை பிரியப்படுத்தாமல், உமக்குப் பயந்து, உம்முடைய கற்பனைகளை மனதார கைகொள்ளு ம்படிக்கு எனக்கு பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சகிப்புத் தன்மை பெருகுவதாக

பாடசாலையிலே படிக்கச் செல்லும் மாணவர்கள், அங்கே பலதரப்பட்ட சக மாணவர்களையும், வேறுபட்ட பல ஆசிரியர்களையும் சந்திக்கின்றார்கள். அவர்களின் பாடசாலை வாழ்க்கையிலே, பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள் மாற்றப்படுகின்றார்கள். பாடசாலையிலே பல வைபவங்கள் நடைபெறுகின்றது. சில மாணவர்கள் சில குறிப்பிட்ட ஆசிரியர்களை அதிகமாக விரும்புகின்றார்கள். சிலர் ஏதோ காரணத்தினால் சில ஆசிரியர்களை அதிகமாக விரும்புவதில்லை. சில மாணவர்களுக்கிடையிலே பல தகராறுகள் ஏற்படுகின்றது. இப்படியான பல சூழ்நிலைகளின் மத்தியிலே பாடசாலைக்கு சென்று வரும் ஒரு மாணவன், ஒரு நாள் மனக் குழப்பத்தோடு வீடு திரும்பினான். பாடசாலையில் தனக்கு நடக்கும் சில சம்பவங்கள் தன்னை அதிகமாக குழப்புகின்றது அதனால் பாடசாலைக்கு செல்வது எனக்கு விருப்பமில்லாமல் இருக்கின்றது என தன் பெற்றோரிடம் கூறினான். அவன் தந்தையார் அவனை அழைத்து: மகனே, பலர் கூடிவரும் இடங்களிலே பலவிதமான சம்பவங்கள் நடைபெறும். அவற்றுள் சில நமக்குப் பிரியமுள்ளதாயும், சில வெறுப்புள்ளதாகவும் இருக்கும் ஆனால் நீ உன் பாடங்களில் மட்டுமல்ல, உன் ஆளுமையில் வளர வேண்டும் என்றால், சவால்களை எதிர்நோக்கி அவற்றை மேற்கொள்வதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். சில கசப்பான அனுபவங்களை சகித்துக் கொள்ள வேண்டும் என்று நல்ல ஆலோசனை கூறினார். பிரியமானவர்ளே, இந்த உலகத்திற்குரியவைகளை அடைந்து கொள்ளும்படிக்கு நாம் பல அசௌகரியங்களை சகித்துக் கொள்கின்றோம். பல சவால்கள், எதிர்ப்புக்கள் மத்தியிலும் மாணவர்கள் சகிப்புத் தன்மையோடு படிக்கின்றார்கள், பெரியவர்கள், மாதாந்த ஊதியத்திற்காக நீடிய பொறுமையோடு உழைக்கின்றார்கள். ஆனால், சபை ஐக்கியத்திலே ஏற்படும் சில சம்பவங்களை ஏன் உங்களால் சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றது? மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். தீமைக்கு தீமை செய்யாமல், குழப்பமான வேளைகளிலும், தெய்வீக சுபாவங்கள் உங்களில் வெளிப்படுவதாக. இதனால் ஈடு இணையில்லாத கன மகிமையைப் பெற்றுக் கொள்வீர்கள்.

**1 பேதுரு 3:17**

**தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.**

**ஜெபம்:** நீடிய பொறுமையுள்ள தேவனே, எங்களுக்கு எதிராக வரும் சவால்களை மாம்சத்திலே மேற்கொள்ளும்படி முயற்ச்சிக்காமல், உம்முடைய வார்த்தையின்படி மேற்கொள்ள கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**புதன் | பங்குனி 24** | மாலை வாசகம் – ஏசாயா 53:1 – 12

# பிரியமான போர்ச் சேவகன்

தன்னுடைய தேசத்தின் பட்டாளத்திலே சேவைக் காலத்தை முடித்து வீடு திரும்பிய போர்ச் சேவகனுடைய சரீரத்திலே பல இடங்களிலே தழும்புகளை கண்ட அவனுடைய மகனானவன், தன் தகப்பனை நோக்கி: அப்பா, உங்கள் சரீரத்திலே இருக்கின்ற தழும்புகள் என்ன என்று கேட்டான். அதற்கு அந்த போர்வீரன்: மகனே, இந்தத் தழும்புகளை பார்க்கின்ற மற்றவர்களுக்கு இது வெறும் காயங்களினால் உண்டான தழும்புகள். ஆனால் எனக்கோ, அவை என் தாய் நாட்டிற்குரிய தேசப்பற்றின் அடையாளங்கள். அவற்றை தரித்திருப்பது என் பாக்கியம் என்றான். இன்று மனிதர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சோகக் கதைகளை அவ்வப்போது அசைபோட்டுக் கொள்வார்கள். அவற்றை பேசும் போது அதிலே ஒரு சோகம் இருக்கும். ஆண்டவராகிய இயேசுவுக்கு என்று ஊழியம் செய்தேன் அல்லது ஊழியத்திற்கு ஆதரவாக இருந்தேன், அதனால் பலர் எண்ணற்ற ஆசீர்வாதங்களை பெற்றார்கள் ஆனால் அவர்களால் எனக்கு உண்டான நோவுகளைப் பாருங்கள் என்று சில விசுவாசிகள் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட அறிக்கையானது, மனப்பூர்வமாக தன் எஜமானுக்கு சேவை செய்யும்படி தன்னை ஒப்புக் கொடுத்த ஒரு நல்ல போர்ச்சேவகனின் அறிக்கை அல்ல. கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவர் பாவமில்லாத பரிசுத்தர். நன்மையேயன்றி தீமையை அறியாதவர். மனித குலத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படி, அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். பிதாவே, உம்முடைய சித்தப்படி எனக்கு ஆகட்டும் என்று தம்மை ஒப்புக் கொடுத்தார். அவ்வண்ணமாகவே, நாமும் பிதாவின் சித்தம் நம்மில் நிறைவேற நம்மை ஒப்புக் கொடுத்திருந்தால், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிமித்தம் நமக்கு உண்டாகும் துன்பங்களானது நமது வாழ்வின் சோகக் கதையல்ல. அதனால் உண்டாகும் தழும்புகளை நாம் ஆனந்த பாக்கியம் என்று எண்ணக்கடவோம்.

**மத்தேயு 5:11**

**என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**

**ஜெபம்:** உண்மையுள்ளவனென(ளெ)ன்று கருதி என்னை அழைத்த தேவனே, தற்காலத்திலே ஏற்படும் பாடுகளை இயேசுவைப் போல சகித்து, உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பும் ஒழுக்கமும்

குழந்தை பருவத்திலே, ஒரு குழந்தையானது, ஒரு நாளைக்கு எத்தனை முறை தன்னை அசுத்தப்படுத்திக் கொண்டாலும், அதன் தாயானவள் அதை சுத்தப் படுத்தாமல் இருப்பாளோ? குழந்தை தன் தாய் சுத்தப்படுத்துவதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஒரு தாயானவள், தன் குழந்தையை கழுவி சுத்தமாக வைத்திருப்பாள். சிறு பிராயத்திலே, அயலிலுள்ள சிறுவர்களோடு ஓடிவிளையாடும் ஒரு பிள்ளையானது, அயலிலுள்ளவர்கள் பேசும் தகாத வார்த்தைகளை பேசும் போது, ஒரு தகப்பனானவர் அதை பாராமுகமாக விட்டுவிடுவாரோ? சிறு பிள்ளைக்கு அது ஒரு கசப்பான அனுபவமாக இருந்தாலும், அதை அழைத்து, அது விட்டுவிட வேண்டிய தகாத வார்த்தைகளை குறித்து, ஒருமுறை அல்லது இரண்டு முறை தயவாக புத்திமதி கூறுவார். அதை அந்தப் பிள்ளை கேளாது போனால், தன் பிள்ளையை உண்மையாக அன்பு செய்யும் தகப்பனானவர் அப்படியே விட்டுவிடுவாரோ? தன் பிள்ளையை கண்டித்து, தண்டித்து, அது நடக்க வேண்டிய ஒழுக்கத்திற்குள் நிச்சயமாக கொண்டு வருவார். அதுபோலவே நம்மில் அன்பு கூரும் நம்முடைய பரம பிதாவும், நல்ல தாயைப்போலவும், நல்ல தந்தையைப் போலவும் இருந்து நமக்கு அறிவுரை கூறி, கண்டித்து, தண்டித்து, ஆற்றித் தேற்றி நடத்தி வருகின்றார். எனவே, நாம் நம்முடைய பிள்ளைகளை அதிகமாக அன்பு செய்கின்றோம் என்று கூறி, நம்முடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய நேரத்தில் அவர்களை நெறிமுறைப் படுத்தாவிட்டால் அது உண்மையான அன்பு அல்ல. அது போலவே, பிள்ளைகளும் தாய் தந்தையின் ஆலோசனைகளை தள்ளிவிட்டு, தாங்கள் விரும்பிய பிரகாரமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டு, தாங்கள் பெற்றோரை நேசிக்கின்றோம் என்று அவர்கள் கூறினால் அந்த அறிக்கையில் உண்மை இருக்காது. நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். தேவ கற்பனைகளானது, நாம் அவருடைய வழியிலே நடப்பதற்கு, நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக்குகின்றது. எனவே அன்பு இருக்கும் இடத்திலே ஒழுக்கம் இருக்க வேண்டும்.

**எபிரெயர் 12:6**

**கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, என் வாழ்வை நெறிப்படுத்தும் உம்முடைய வேதத்தை நான் என் வாழ்வில் கைக்கொண்டு, உம்முடைய அன்பிலே நிலைத்திருக்கும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனப்பூர்வமாய் சேவை செய்யுங்கள்

**கொலோசெயர் 3:24**

**எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

ஐயா போதகரே, ஊழியம் செய்யும்படியல்லவோ வந்தேன், ஆனால் உபத்திரவங்களை தாங்க முடியவில்லை. எவ்வளவு நன்மை செய்தாலும் நன்றியறிதலை காணமுடியவில்லை. இதிலிருந்து என்னை விட்டுவிடுங்கள் என்று உதவி ஊழியம் செய்யும் ஒரு மனிதனானவன் தன் மனதிலுள்ளதை உள்ளபடி வயதான தன் தலைமைப் போதகரிடம் கூறிக் கொண்டான். வயதான போதகரோ அவனை நோக்கி: தம்பி, இப்படி கொஞ்சம் உட்காரு. நீ திறந்த மனதோடு உள்ளதை பேசுவதைக் குறித்து நான் பாராட்டுகின்றேன். மந்தைகளை மேய்த்து செல்லும் போது, கடும் வெயில், கடும் குளிர், பெரும் மழை, புயல்க்காற்று போன்ற சாதகமற்ற சூழ்நிலைகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. தாவீது என்னும் இளைஞன் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. ஆனால் அவன் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, ஆட்டை அதின் வாய்க்குத் தப்புவித்தான் வனவிலங்குகள் அவன் மேல் பாய்ந்தபோது, அவன் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டான். அதுபோலவே, இந்த உலகத்திலே வாழும் மந்தைகளாகிய விசுவாசிகள் பலதரப்பட்ட சூழ்நிலைகளை எதிர்நோக்குகின்றார்கள். சில வேளைகளிலே அவற்றினால் பயந்து, மிரண்டு போய்விடுகின்றார்கள். அது மட்டுமல்லாமல், அவர்களை வஞ்சிக்கும்படி, ஓநாய்களைப் போலவும், கெர்ச்சிக்கின்ற சிங்கங்களைப் போலவும் பிசாசானவன் சுற்றித்திரிகின்றான். அவற்றிலிருந்து அவர்களை காத்துக் கொள்ளும்படி மேய்ப்பனானவன் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். பிசாசானவனின் தந்திரங்களை மேற்கொள்வதற்கு நாங்கள் எப்போதும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்தவர்களாக சேவை செய்ய வேண்டும். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிறான் அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். நீ யார் என்பதை அறிந்து கொண்டு, தேவனுடைய ஊழியனாக இரு. தேவ பயத்தோடு நீ கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவித்தாயானால், சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெற்றுக் கொள்வாய் என்று அறிவுரை கூறினார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, உபத்திரவங்களைக் கண்டு பயந்து, நீர் தந்த பொறுப்புக்களை தள்ளிவிட்டு ஓடிப் போய்விடாதபடிக்கு, நீடிய பொறுமையுள்ளவனாக சேவை செய்ய பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்

மோசே என்ற மனிதனானவன், தேவனுடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து வழிநடத்திச் செல்லும்படிக்கு தேவனாகிய கர்த்தருடைய அழைப்பை பெற்றிருந்தான். மோசே பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார். எகிப்திலேமோசேயைக் கொண்டு, தேவனாகிய கர்த்தர் பலத்த அற்புதங்களைச் செய்தார். தேவன் கூறிய பிரகாரமாக மோசே நடந்து கொண்ட போது, பெரிதான அதிசயங்கள் நடைபெற்றது. அற்புதங்களையும், அதிசயங்களையும் கண்ட அதே ஜனங்கள், அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்ற பின்பு, மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, பல முரட்டாட்டங்களை செய்தார்கள். சாந்தகுணமுள்ள மோசே பெலனற்று போகும்படிக்கு அந்த ஜனங்களுடைய முரட்டாட்டமானது அவ்வளவாய் கொடூரமாய் இருந்தது. பிரியமானவர்களே, இன்றைய நாளிலே இந்த சம்பவத்தை சிந்திக்கும் போது, இரண்டு காரியங்களை குறித்து தியானம் செய்யுங்கள். முதலாவதாக: வனாந்திரம் போன்ற இந்த உலக யாத்திரையிலே, ஊழியம் செய்வது மிக இலகுவான காரியம் அல்ல. அதாவது, இந்த உலகத்தாலும், பொல்லாங்கனாகிய பிசாசானவனுடனும் ஒவ்வொரு கணப்பொழுதும் நமக்கு போராட்டம் உண்டு. அந்த போராட்டங்களோடு, ஒரு விசுவாசி இன்னும் அதிகபோராட்டங்களைக் கூட்டிக் கொண்டால், அந்த விசுவாசி, யாருக்கு உதவி செய்கின்றான்? சிந்தித்துப் பாருங்கள். இரண்டாவதாக: கானகப் பாதையாகிய இந்த உலக வாழ்க்கையிலே உபத்திரவங்கள் உண்டு. சூழ்நிலைகள் நமக்கு சாதகமாக இருக்க மாட்டாது, ஆனால் உலகத்தை ஜெயித்த கர்த்தரோ எப்போதும் நம்முடைய பட்சத்தில் இருக்கின்றார். சாதகமற்ற சூழ்நிலையில் அவருடைய வார்த்தையை பற்றிக் கொண்டு வாழ்வோமாக இருந்தால், உலகத்தை ஜெயித்துக் கொள்வோம். மாறாக நாம் முரட்டாட்டம் செய்வோமாக இருந்தால், அதன் முடிவானது நமக்கு அழிவாகவே இருக்கும். பகையை உண்டாக்கும்படியல்ல, பகையை அகற்றி சமாதானத்தை உண்டுபண்ணும் பொருட்டே நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். பிரச்சனைகளுக்கு காரணர்களாக இருக்கும்படியல்ல, சமாதானக் காரணர்களாக இருக்கும்படிக்கே நாம் அழைப்பை பெற்றிருக்கின்றோம். எனவே, முரட்டாட்டங்களையும் முறுமுறுப்பையும் நமமை விட்டு அகற்றி உலகத்தை ஜெயங் கொள்ளுவோம்.

**1 யோவான் 5:4**

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

**ஜெபம்**: வெற்றி தரும் தேவனே, மாம்சத்தின் எண்ணங்களுக்கு இடங்கொடுத்து, பிரச்சனைகளை இன்னும் அதிகரிக்காதபடிக்கும், உம்முடைய ஆவிக்கு இடங் கொடுத்து பிரச்சனைகளை மேற்கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**ஞாயிறு | பங்குனி 28** 📖 மாலை வாசகம் – லூக்கா 19:35 – 44

# மகிமையின் ராஜா வருகின்றார்

மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள். அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக, இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார். இதற்கு முன்னதாக ஆண்டவராகிய இயேசு பல தடவைகள் எருசலேமிற்குள் சென்றிருந்தார். ஆனால் இந்த நாளின் விசேஷம் என்ன? யூத மதத்தை சேர்ந்த பிரதான ஆசாரியர்கள் இயேசுவைக் கொலை செய்யும்படி வகை தேடிக்கொண்டிருந்தார்கள். இவை யாவற்றையும் அறிந்திருந்தும், தான் இந்த பூவுலகிற்கு, வந்ததையும் பிதாவின் நோக்கத்தை நிறைவேற்றும்படியும் இப்போது எருசலேமிற்குள் செல்கின்றார். மனித குலம் வாழ்வடையும்படி, நித்திய ஆக்கினையிலிருந்து விடுதலையடையும் வழியை உண்டாக்கும்படி தீர்கதரிசிகளின் முன்னுரைப்பின்படி அவர் எருசலேமிற்குள் கழுதையின் மேல் ஏறி, சாந்த குணமுள்ளவராக செல்கின்றார். உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக அவர் எருசலேமிற்குள் வந்தார். ஆனால் அவர்கள் மேசியாவை எதிர்பார்த்திருந்தும் அவர் தாழ்மையுள்ளவராக வந்த போது, அவர்களில் பலர், மகிமையின் ராஜாவாகிய இயேசு யார் என்பதை அறிய மனதில்லாதிருந்தார்கள். அதனால் இயேசு அவர்களுக்காக கண்ணீர்விட்டு அழுதார். உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது என்று கூறினார். தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த வார்த்தைகளை அன்றிருந்த ஜனங்கள் உணராமல், இயேசுவை தள்ளிவிட்டார்கள். அவர் மறுபடியும் வருவார் என்ற வாக்கை நாம் இன்று அறிந்திருக்கின்றோம். அவர் ஜெய வேந்தனாய் மத்திய வானத்திலே தோன்றுவார். எனவே அந்த நாளிலே அவருக்கு எதிர்கொண்டு போகத் தகுதியுள்ளவர்களாகும்படிக்கு பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்றுவோமாக.

**வெளிப்படுத்தல் 22:12**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.**

**ஜெபம்**: நீதியின் தேவனே, கர்த்தருடைய நாளுக்கென்று நாங்கள் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கும்படிக்கு எங்களுடைய வாழ்வை உமக்குப் பிரியமானதாக காத்துக்கொள்ளும்படிக்கு எங்களை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம யாத்திரை

அழகான நீலக் கடலிலே, கம்பீரமான பல தட்டுக்களைக் கொண்ட உல்லாசக் கப்பல், அமைதலாக கடலிலே ஓடிக்கொண்டிருந்தது. அதிலுள்ள பயணிகள் பெரும் மகிழ்ச்சியுள்ளவர்களாக காணப்பட்டார்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டேலைப் போல பல வசதிகளும், சலுகைகளும் அங்கே காணப்பட்டது. பார்வையை கவரும் வகைவகையான உணவு பண்டங்கள் இருந்தன. ஆடல் பாடல் மற்றும் பல களியாட்டங்கள் யாவும் முறையே நடந்து கொண்டிருந்தது. இவை யாவும் 30 வினாடிகள் நீடித்த விளம்பரத்தில் நேர்த்தியாக காட்டப்பட்டது. ஆனால், அந்த உல்லாசப் பயணத்திலே கடலிலே ஏற்படக்கூடிய பயங்கரங்கள், ஆபத்துக்கள், கடல் ஒவ்வாமைகள், தொற்று நோய்கள் போன்றவற்றைப் பற்றி எதையும் கப்பல் பயண முகவர்கள் விளம்பரப்படுத்த மாட்டார்கள். எனினும், பயணிகள் அந்த அபாயங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும், அதை ஏற்றுக் கொண்டு, அதற்குரிய கட்டணத் தொகையை கொடுத்து, பயணத்தை மேற்கொள்கின்றார்கள். நம்முடைய பரம தேசத்தின் பயணம், இத்தகைய உல்லாச பயணத்திற்குரிய விளம்பரத்தை போன்றதல்ல. நமக்கு வரவிருக்கும் பலன் ஈடு இணையற்றது. பரம தேசத்திலே அளவில்லாத பேரின்பம் உண்டு. நித்தியர் இயேசுவோடு நீடூழி வாழும் பாக்கியத்தை அடைவோம். அங்கு சென்று சேரும் வரைக்கும், நாம் இந்த உலகத்திலே வாழ்வதினால், எமக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் நாம் திடன் கொள்ள வேண்டும். உலகத்தை ஜெயித்தவர் நம்மோடு இருக்கின்றார். உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் என்று நம்முடைய ஆண்டவர் கூறியிருக்கின்றார். இப்படியாக நம்முடைய பயணத்தில் ஏற்படக்கூடிய எதிர்ப்புக்களை கர்த்தர் நமக்கு முன்கூட்டியே அறியத் தந்திருக்கின்றார். அத்துடன் அவர் நம்மை விட்டுவிடவில்லை, நாம் சத்திய வழியிலே நடக்கும்படிக்கு, நம்முடனே என்றென்றைக்கும் இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் நமக்கு தந்தருளியிருக்கின்றார். மேலும், "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படியாக, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு வாக்குரைத்திருக்கின்றார்.

**யோவான் 14:3**

**நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.**

**ஜெபம்:** அன்புள்ள பரலோகப் பிதாவே, நாங்கள் பரலோகம் வந்து சேரும் வரை இந்த உலகத்திலே இருக்கும் பாடுகளை மேற்கொள்ளத் தக்கதாக நீர் எங்களுக்குத் தரும் பெலத்திற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் பாடுகள்

இந்த நாட்களிலே, உலகம் முழுவதும் அநேக ஜனங்கள், இயேசு கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து அதிகமாக தியானிக்கின்றார்கள். கிறிஸ்துவின் பாடுகளை நாம் ஏன் தியானிக்க வேண்டும்? அவர் இத்தனை பாடுகள் பட்டாரே என்று அவருக்காக புலம்பி அழுவதற்காக அல்ல. ஏனென்றால், கர்த்தராகிய இயேசு பாடுகள் படும் போது, திரள் கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று கூறினார். கிறிஸ்துவின் பாடுகளை நாம் தியானிக்கும் போது, அவர் ஏன் இத்தனை பாடுகளை பட்டார் என்ற கேள்வியை நாம் நம்மிடத்தில் கேட்க வேண்டும். அந்தப் பாடுகளின் நோக்கம் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நானும் நீங்களும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காக, இத்தனை பாடுகளை அவர் பட்டார். அந்த பாடுகளின் வழியாக நமக்கு உண்டான விலை மதிக்க முடியாத இரட்சிப்பை நாம் கருத்துடன் காத்துக் கொள்ள வேண்டும். அதன் பொருட்டு, நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலிலே நாம் மறுரூபமாக்கப்பட வேண்டும். தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழும் போது, இந்த உலகத்தால் நமக்கு பல உபத்திரவங்கள் உண்டாகும். இவ்வண்ணமாகவே, இயேசுவின் சீஷர்கள் நற்செய்தியை அறிவித்ததினால், அன்றிருந்த மதத்தலைவர்களின் சங்கத்தால் கடிந்து கொள்ளப் பட்டார்கள். ஆலோசனை சங்கத்தினர், இயேசுவின் சீஷர்களை பிடித்து, அவர்களை அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். சீஷர்களோ, இயேசுவின் நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, நீங்கள் இயேசுவின் பாடுகளை தியானிக்கும் போது, அவரைப் போல மாறத்தக்கதாய், நன்மை செய்து பாடனுபவிக்கத்தக்கதாய், அவருடைய சாயலிலே தினமும் வளரத் தக்கதாய் உங்களை ஒப்புக் கொடுத்து தியானியுங்கள்.

**1 பேதுரு 4:14**

**நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்;**

**ஜெபம்**: என்மீது அன்பு கூர்ந்த பிதாவே, உம்முடைய திருக் குமாரனாகிய இயேசுவைப் போல அனுதினமும் அவருடைய சாயலிலே வளரும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனால் கூடாதது ஒன்றுமில்லை

சேற்றில் விழுந்த ஒரு வாலிபனை காப்பாற்றும்படிக்கு அவனுடைய உற்ற நண்பர்கள் சிலர் பல முயற்ச்சிகளை செய்தார்கள். அந்த வாலிபன் சேற்றில் அதிகமாக புதைந்து விட்டதாலும், அந்த நிலம் சதுப்புள்ளதாகவும், பரந்த பிரதேசமாகவும் இருந்ததால், தங்கள் உயிருக்கே இனி ஆபத்து வரும் என்ற நிலையில்தாம் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் அவனை விட்டுவிட்டார்கள். இவ்வண்ணமாகவே துன்மார்க்க உளையிலே மூழ்கியிருக்கும் மனிதர்களை விடுதலையாக்கும்படிக்கு மனிதர்கள் முயற்ச்சியெடுப்பதுண்டு. பின்னர், இவன் படுகுழிக்குள் விழுந்துவிட்டான் இனி நாம் நம்மை பாதுகாக்க வேண்டும் என்று மனிதர்கள் தங்கள் முயற்ச்சிகளை விட்டுவிடுவதுண்டு. கர்த்தராகிய இயேசுவோடு இரண்டு குற்றவாளிகள் சிலுவையிலே அறையப்பட்டிருந்தார்கள். அவர்கள் அக்காலத்திலே இருந்த வல்லமைமிக்க ரோம ராஜ்யத்தினால் குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்டு சிலுவையிலே அறையப்பட்டார்கள். அவர்களுக்கும் மரணத்திற்கும் சொற்ப நேரமே இருந்தது. அவர்கள் தங்கள் குற்றத்திலே மரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் தன் குற்றத்தைக் குறித்து மனம் வருந்துகின்றவனாகவும், தேவனுக்கு பயப்படுகின்றவனாகவும், இயேசுவை விசுவாசிக்கின்றவனாகவும் இருந்தான். அவர்களுடைய குற்றங்களுக்காகவும் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்த இயேசு சிலுவையில் அவர்கள் அருகே தொங்கிக் கொண்டிருந்தார். பாடுகளும், நிந்தையும் அவமானமும் சகித்தவராய் அவர் தொங்கிக் கொண்டிருக்கும் வேளையிலும், தன்னை வேண்டிக் கொண்ட குற்றவாளியை மன்னித்து அவனுக்கு மறுவாழ்வு கொடுத்தார். துன்மார்க்கன் துன்மார்க்க உளையிலே அழிந்து போவது தேவனுடைய சித்தமல்ல. ஆழமான படுகுழி போன்ற பாவ சேற்றிலே கிடந்தாலும், தம்மை நோக்கி பார்க்கின்றவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்குபடி ஆண்டவர் இயேசு சித்தமுள்ளவராகயிருக்கின்றார். ஒருவேளை இந்த உலகின் வாழ்வு முடிந்து போனாலும், மறு உலகிலே நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ளும் வழியை நமக்கு காண்பிக்கின்றார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும் அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.

**ஏசாயா 1:18**

உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும் அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தகப்பனே, மனிதர்கள் அன்பு மட்டுப்படுத்தப்பட்டது, ஆனால் உம்முடைய அன்பின் ஆழம் அளவிடமுடியாதது. உம்முடைய மாறாத திவ்விய அன்பிற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபம் செய்வோம்!

உங்கள் வாழ்க்கையை சர்வ வல்லமையுள்ள பிதவாகிய தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் மனிதனாக வந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, என்னை மீட்பதற்காக பாடுகள்பட்டு தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே எனக்காக மரித்து, பாவத்தை வென்று உயிர்ந்தெழுந்தார் என முற்றிலும் விசுவாசிக்கின்றேன். இன்று நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்! இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களை குறித்ததான கசப்பை என் மனதில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்குச் செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தேவனே, மோட்ச வாழ்க்கைக்கு அவசியமானதை என் வாழ்க்கையிலே முதலாவதாக நான் தேட என்னை வழி நடத்தும். இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்து தேவ சமாதானம் என் உள்ளத்தை ஆழ கிருபை செய்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! உம்மை உண்மையாய்த் தேடு கிற யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவ னுக்காகிலும் உதவி செய்வது உமக்கு லேசான காரியம்!

காரிருள் சூழ்ந்திருக்கும் இந்த உலகத்திலே, உம்முடைய வார்த்தையின் வெளிச்ச த்திலே ஜீவிக்க பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும்.

எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் **'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, இந்தியாவில் இந்த சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகிறவர்களின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மாதம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**

gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்தர இலவசப் பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

## மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:**

**மின் அஞ்சல் E-MAIL:**

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca